போன் நெ. 15. விலை 2 அணா REGD NO. 4642

திராவிடநாடு

மலர் 13 | 8—8—54 | இதழ் 6

குமரி முனையில் உரிமைப்போர்

தி. மு. க. தரும் ஆதரவு

டில்லியே!

நியாயம் வழங்கு!

நீதி காட்டு!

தமிழர்—மலையாளி பகையை மூட்டிவிடாதே!

அடக்குமுறை ஒழிக!

*

சுவரொட்டிகள், நாஞ்சில் மாவட்ட முழுமையும் அலங்கரிக்கும்! அவைகளை ஒட்டியவண்ணம் ஒவ்வொரு தி. மு. க. தோழரும், ஆர்வத்தின் சின்னங்களாக வலம் வருவர்!

கேரளத்துடன் இணைந்து கிடக்கும் தமிழகப் பகுதிகளைத் தரும் பொறுப்பை வகிக்கும் டில்லி 'பேசா மடந்தை'யாக இருக்கிறது. அது கண்டு கொதித்தோர், கடந்த சில தினங்களாக உரிமைப் போர் துவங்கி, சிறைக்கோட்டம் சென்ற வண்ணமே உள்ளனர்!

அந்த உரிமைப்போரில் உரிய பங்கைச் செலுத்த திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்திருக்கிறது. தோழர் கே. ஏ. மதியழகன் அதற்கான பொறுப்பாளராகப் பணியேற்றிருக்கிறார்.

ஆக-6. அடையாள மறியல்

செல்க! வெல்க!!

முதல் முழக்கம், ஆகஸ்டு 6ஆம் தேதியன்று, கேட்கப்போகிறது.

அன்று,

செங்கோட்டை, நாகர்கோவில் ஆகிய இடங்களிலுள்ள கோர்ட்டுகளின் முன்பு, தி. மு. க. தோழர்கள், அறப்போரில் ஈடுபடுவார்கள்.

மணிக்கு ஒரு குழுவீதம் அன்று அறப்போர் நடைபெறும்.

*

நிலைமையை நேரில் காணச்சென்றிருந்த தி. மு. க. பொதுச்செயலாளர், துணைச் செயலாளர், நாஞ்சில் மாவட்டச் செயலாளர் ஆகியோரைச் சந்தித்த திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் போராட்டத் தலைவர் குஞ்சன்நாடார், அறப்போருக்கு சகலரின் ஒத்துழைப்பையும் விரும்புவதாகத் தெரிவித்திருக்கிறார். கட்சி சார்பற்ற உரிமைப் போராட்டம், இது! மலையாளருக்கும் தமிழருக்குமிடையே மாச்சரியப் போர்—என்று கதை கட்டுவோர் உண்டு. அல்ல! அல்ல!! உரிமை கோருவோருக்கும், உரிமையை மறுப்போருக்கும் இடையே நடைபெறும் சாத்வீகப் போர். கேரளம், நம் எதிரியல்ல! டில்லி!—என்பதை விளக்கவே, மேற்கண்ட சுவரொட்டிகள், ஒட்டப்படும்.

*

"திராவிட நாடு கோருகிற நீங்கள், மலையாளிகள் போக்கை எதிர்த்து திருவாங்கூர் தமிழர்கள் நடத்தும் போராட்டத்தை ஆதரிப்பீர்களா?" என்று நாகர்கோவில் பொதுக்கூட்டத்தில் கம்யூனிஸ்டுத் தோழர் ஒருவர், கேட்ட கேள்வியின்போது, நமது நிலையை, பொதுச் செயலாளர் விளக்கியுள்ளார்—"மயிலும் கிளியும் மாடப்புறவும் சோலையிலே கூடி வாழட்டும் என்று நான் கூறினால், ஒன்றையொன்று கொத்தித் தின்ன வேண்டுமென்று பொருளா?" என்பதாக.

இன்று குமரி முனையில்! இதே போல, முன்பு வடவெல்லையாம் திருத்தணியிலும், நமது பங்கைச் செலுத்தினோம்—மாச்சரியம்

வளர்க்க அல்ல; உரிமைக்காக, என்பதனை பொதட்டூர்ப்பேட்டை மாநாட்டில் தெளிவுபடுத்தியிருக்கிறோம். நமக்கு, எதிரி, டில்லியே ஒழிய மாநிலங்கள் அல்ல! நமக்கு எதிரி ஆதிக்கக்காரர்காரர்களே ஒழிய — மக்கள் அல்ல!! அட்டகாசம் செய்யும் அரசுகளே அன்றி, கேரளரும், ஆந்திரரும் அல்ல.

*

டில்லி!—ஒரு சூதப்பீடம். எல்லை மாற்ற வேலைகளை, ஒரு நிமிட உத்தரவின்மூலம் செய்துவிடலாம். பெல்லாரி பிரச்னையில், ஒரு பகுதி மைசூருடன் சேர்க்கப்பட்டு, வாழத் துவங்கிவிட்டது. அதுபோல், தமிழர்வாழ் பகுதிகளை, நமக்கு அளித்துவிடமுடியும். ஆனால், நேரு பண்டிதர், 'மொழிவாரி ஆராய்ச்சிக் கமிஷனை'ச் சாக்கிட்டு இந்தப் பிரச்னையைப் பெரிதாக்குகிறார். ஆந்திரர்களுக்கும் தமிழர்களுக்கும், தமிழர்களுக்கும் மலையாளிகளுக்குமிடையே, தகராறு நடக்கவேண்டுமென விரும்புகிறார். அதற்குக் காரணம், இந்த மண்டிலங்கள் யாவும், பொது விவகாரத்தின்போது, டில்லியின் போக்கைக் கண்டிப்பதும்; ஆந்திரத்தில் பிரகாசமும், திருவாங்கூரில் பட்டம் தாணுவும் அரசு நடத்துவதும் தான். இது அவருடைய சொந்தப் பிரச்னை! சூது காரணமாக, அந்தப் பிரச்னை, பெருந்தீயாக மாறி — ஒவ்வொருவருக்குள்ளும் உட்பகை வளரவேண்டுமென்று ஆசைப்படுகிறார்!! அதனாலேயே தள்ளிப்போடுகிறார்.

ஆகவே, அறப்போர் அவருடைய கவனத்தைக் கவரும் வகையில், நடத்தப்படுகிறது—அதற்கு, இவ்வழியே, நல்லது! தமிழர்களின் கொதிப்பைக் காணும், கேரள அரசு, டில்லியை நோக்கிப் படையெடுத்து — பிரச்னை தீர வழி செய்யட்டும். காங்கிரஸ் ஆட்சியை விட பிரஜா சோஷியலிஸ்டுகளுக்கு, இதனைச் செய்ய சாத்யம் இருக்கிறது.

அதனைத் தூண்டிடும் வகையில், நடைபெறுவதே, இந்த அறப்போர்.

இதற்குமாசுகற்பித்து, 'மலையாளி—தமிழர்' சண்டையை வளர்த்து, சிந்தும் இரத்தத்தில் செல்வாக்கு பெறும் குள்ளநரிகள் உண்டு. அவர்கள் வாய்க்குமூடிபோடும் வகையில், அறப்போர் நடைபெறவேண்டும்.

*

கடந்த பல தினங்களாக கஷ்ட நஷ்டங்களையேற்று, சிறைக் கூடம் சென்றவண்ணமேயிருக்கும், தி. த. நா. கா. கா. தலைவர்களையும், தொண்டர்களையும்வாழ்த்துகிறோம்.

தமது உரிமைக் குரலைக் காட்ட அடையாளப்போரில் ஈடுபடவிருக்கும் தி. மு. க. தோழர்களின் வீர உள்ளத்தையும் வாழ்த்துகிறோம்.

'டில்லியே, நம் எதிரி!'— என்னும் ஒலிக்கட்டும் இக்குரல்,

'ஆதிக்கபுரி ஒழிக!' — [illegible] எழுப்புங்கள், முழக்கம்

நாஞ்சிலே! நல் [illegible] கோட்டமே! செல்க — வெல்க, என்று வாழ்த்துகிறோம்! வழியனுப்புகிறோம்!!

★

'அது' வேலை—அதுவல்ல!

“ஒரு தீப்பெட்டிக்குச் சர்க்கார் எவ்வளவு வரி போடுகிறார்கள்?”

“அரை அணா தீப்பெட்டிக்குச் சுமார் நாலு தம்பிடி வரி விதிக்கிறார்கள்”

“அப்படியானால் ஒரு தீப்பெட்டியின் அடக்கவிலை இரண்டு தம்பிடி தானா?”

“ஆமாம், அந்த இரண்டு தம்பிடியிலேதான் இத்தனை ஆயிரம் ஏழை எளிய மக்கள் பிழைத்து வருகிறார்கள்”

*

கேள்விகேட்டவர், எழுத்தாளர்! பதில் தந்தவர் தீப்பெட்டி உற்பத்தியாளர்!!

அரையணா கொடுத்து வாங்குகிறோமே, தீப்பெட்டி—அதன் அடக்க விலை, இரண்டு தம்பிடி தானாம்—மீதி நாலு தம்பிடியும் வரியாகப் போகிறதாம், சர்க்காருக்கு.

எவ்வளவு விசித்திரம் பாருங்கள்! உபயோகப்படும் பொருளுக்குரிய விலையைவிட இரண்டுமடங்கு வரி கொடுத்துவருகிறோம், சர்க்காருக்கு.

அதுவும், எந்தச் சர்க்காருக்கு? பணமில்லாப் பல்லவி பாடும் சென்னைக்கா? அல்ல; டில்லிக்கு. இவ்விதம் ரூ 5 கோடி ரூபாய், ஆண்டு ஒன்றுக்கு, கொள்ளை போகிறதாம். இந்த அக்ரமத்தைக் கேட்கும்போது, மனம் கொதிக்கும், மக்களின் நல்வாழ்வு விரும்புவோருக்கு!

ஆனால், கேள்வி கேட்ட எழுத்தாள நண்பர் இந்த விளக்கத்தை அளித்துவிட்டு என்ன எழுதுகிறார், தெரியுமா?

“அடடா! என்ன அருமையான விட்டுத் தொழில். ஆயிரக்கணக்கான ஏழைமக்களுக்கு வேலையும் கூலியும் கொடுப்பதுடன் சர்க்காருக்கும் நல்லவா நல்ல வருமானம் கொடுக்கிறது!” வருமானம் கொடுக்கிறதாம்!

அடடா!!—என்று முடித்துவிட்டார், அன்பர். பாபம், அவரென்ன செய்வார்? உள்ளத்திலபட்டதை எழுதவாமுடியும்! அதையெல்லாம் எழுதுவதற்காகவா அவரைசிவகாசிக்கும் சாத்தூருக்கும் அனுப்பிவைத்தார்கள்? ஏதோ, 'கைத்தொழில் மலர்' என்று போடவேண்டும், பக்கத்துக்குப் பக்கம் விளம்பரம் சேகரிக்கவேண்டும் என்பது தவிர, வேறென்ன! அவர்களின் 'லட்சியம்' ஈடேறிவிட்டது—எழுத்தாள நண்பருக்கும் 'அடடா!'வுடன் தீர்ந்துபோய்விட்டது, வேலை. ஆனால், மக்களுக்கு! அந்த எண்ணம் உள்ளத்திலிருந்தால், தீப்பெட்டி மலர் வெளியிடும் தேசிய ஏடாம் 'கல்கி' என்னென்னவோ செய்யமுடியும், அத்தொழிலுக்கும், அதன்மூலம் கொள்ளைபோகும் பணத்துக்கும். அதுவா அதற்கு வேலை? பிசினஸ்! பிசினஸ்!!

❀

மக்கள் நல ஆட்சி

இருதயராஜ் M.A

காலம் மாறியது. இங்கிலாந்தில், தொழிற்புரட்சி ஏற்பட்டது. அதன் விளைவாக எண்ணற்ற தொழிற்சாலைகள் தோன்றின. ஒரு முதலாளியான தொழிற்சாலைச் சொந்தக்காரனின் கீழ் நூற்றுக்கணக்கான தொழிலாளர் வேலைசெய்யத் துவங்கினார்கள்.

புதுப் பிரச்னைகள் எழுந்தன. ஒரு முதலாளி நினைத்த மாத்திரத்தில் நூற்றுக்கணக்கான தொழிலாளரைத் திடீரென்று வேலையைவிட்டுத்தள்ளிவிடுவான். அவனையே நம்பிக்கொண்டிருந்த அத்தனை பேரும் தெருவில் நிற்பார்கள், வாழவழியின்றி. இன்னொரு முதலாளி அனாதை விடுதிகளிலிருந்து ஏழைச் சிறுவர்களைக் கொண்டுவந்து கூலியும் கொடுக்காமல் ஆலையில் காலையிலிருந்து மாலைவரையில் மாடாக உழைக்க வைப்பான். கேட்க நாதியின்றி, சீந்துவாரற்று, அவர்கள் செத்து மடிவார்கள்.

இன்னொரு சுரங்கச் சொந்தக்காரன் நூற்றுக்கணக்கான தொழிலாளரைச் சுரங்கக் குழிக்குள் அனுப்புவான்–சரியான பாதுகாப்புகள் ஏற்படுத்திக் கொடுக்காமல், சுரங்கத்தில் மண் சரிந்து தொழிலாளர் பூமிக்குள் அகப்பட்டுமேலே வர வழியின்றி அவலமாய்ச் சாவார்கள். காலை முதல் மாலைவரை, பார்த்து வேலை செய்வதற்குப் போதிய வெளிச்சம் இருக்கும் வரை தொழிலாளரிடம் வேலைவாங்கப்பட்டது ஆலைகளில்.

'தொழிலாளரின் துயரைப் போக்கக் கூடாதா, அவர்கள் வாட்டத்தைத்துடைக்கக் கூடாதா, அரசாங்கம் ஆலைச்சட்டம் இயற்றக்கூடாதா"? என்று யாராவது கேட்டால் முதலாளிகளின் செய்கைகளைக் கண்டித்து அவர்கள் இப்படிச் செய்ய வேண்டும், அப்படிச் செய்யக் கூடாது என்று சட்டமியற்றினால், சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதாகும். ஒரு முதலாளியிடம் வேலை செய்யப்பிடிக்கவில்லையானால் தொழிலாளி வேறு எங்காவது வேலைப் பார்த்துக் கொள்ளட்டும். இது அரசாங்கத்தின் பதில்.

"பெரும் முதல் போட்டுத் தொழில் நடத்தும் முதலாளிகளைக் கண்டித்து அவர்களுக்குக் கோபமூட்டினால், அவர்கள் போட்ட முதலையெல்லாம் எடுத்துக்கொண்டு புதிதாக முதல் போட மறுத்துவிடுவார்கள். பிறகு நாட்டில் தொழில் வளர்ச்சி தடைப்படும்" இது பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கை.

2

தட்டிக்கேட்க ஆளின்றி, தொழிலதிபர்கள் தொழிலாளரை வஞ்சித்து அவர்களைப் பல தொல்லைகளுக்காளாக்கினார்கள்.

இவ்விதம் தொழிலாளரின் துயரம்—புதுச் சீமான்களான ஆலைமுதலாளிகளின் அக்கிரமங்கள் கட்டுக்கடங்காமல் அதிகரித்தது.

இன்னும் பார்த்துக்கொண்டு அரசாங்கம் பேசாமலிருக்கலாமா? என்ற வாதத்துக்கு ஆதரவு வளரத் தொடங்கியது.

"வஞ்சிப்பவரோ சிலர், வஞ்சிக்கப்படுபவர்களோ பலர்"–வஞ்சனையால் வருந்துபவரின் வேதனை வளர்ந்தால்—குமுறிக்கொண்டிருக்கும் எரிமலை ஒரு நாள் கனைக்கக்கியே தீரும்–அரசாங்கத்துக்கல்லவா ஆபத்து" இப்படி இடித்துக் கூறியவர்களின் தொகை பெருகியது.

அரசாங்கம் அசைந்தது. ஆலைச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

அப்பொழுதுங்கூட, "அரசாங்கம் முதலில் பெண்களையும் பிள்ளைகளையும்தான் ஆலை முதலாளிகளின் கொடூரத்தினின்றும் காக்கக் கடமைப்பட்டிருக்கிறது, ஆண்கள் தங்களைத் தானே காப்பாற்றிக்கொள்ளத் தகுதியுடையவர்கள்; அதனால் அவர்களுடைய நலன்களுக்காக அரசாங்கம் ஒன்றும் செய்யத் தேவையில்லை" என்ற எண்ணத்தில் முதன் முதலில் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் உதவியாகத்தான் சட்டங்கள் இயற்றப்பட்டன.

ஆனால், நடைமுறையில் ஆண்களும் தங்களை முதலாளிகளின் கொடூரத்தினின்று காப்பாற்றிக் கொள்ளச் சக்தியற்றவர்கள்; ஏனெனில், முதலாளியை எதிர்த்துப் பேச எவனும் அஞ்சவேண்டிய நிலையிலிருக்கிறான் — வயிற்றுப் பிழைப்பு நின்றுவிடும் என்ற பயத்தால். பணக்கார முதலாளிக்கு இருக்கும் பலம் எங்கே—தொழிலாளியின் சக்தி எங்கே? ஐம்பது அறுபது ஆண்டுகளாக அரசாங்கத்தின் பாதுகாப்பிலே இருந்துவரும் பெண்கள் பிள்ளைகளின் நிலை எவ்வளவோ முன்னேறி இருக்கிறது. ஆனால் ஆண்கள் அரசாங்கத்தாலும் கைவிடப்பட்டு, தங்களாலும் முதலாளியை எதிர்க்க வலுவின்றித் தத்தளிக்கின்றனர். அவர்களும் நல்வாழ்வு வாழவேண்டுமானால் அரசாங்கம் அவர்களுக்காகவும் சட்டங்கள் தீட்டவேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்தார்கள்.

அதற்குப் பிறகுதான் ஆண்களுக்கும் சட்டங்களின் மூலம் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. எத்தனை மணி நேரம் தொழிலாளர் ஆலைகளில் வேலைசெய்யலாம், ஆலைகளில் யந்திரங்களினால் வேலைசெய்பவருக்கு ஆபத்து ஏற்படாமல் பாதுகாப்

ளிப்பது, வாழ்க்கைக்குத் தேவையான குறைந்தபட்ச கூலியை நிர்ணயிப்பது, ஆகிய இந்தக் காரியங்களெல்லாம் அரசாங்கம் கவனிக்கவேண்டியதாயிற்று.

மக்களுக்காக—அவர்கள் நலனுக்காக—அவர்களின் நல்வாழ்வுக்காக, அரசாங்கம் இருக்கிறதேயன்றி; அரசாங்கத்துக்காக, அதன் நன்மைக்காக மக்கள் இருக்கவில்லை என்ற எண்ணம் 20 வது நூற்றாண்டில் தான் வேரூன்றியது.

அதிலிருந்து அரசாங்கம் மக்களுக்குச் சேவை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட இயந்திரம், அது ஒரு சமூக சேவை சாதனமேயன்றி ஒரு பலம் பொருந்திய அடக்குமுறைச் சாதனமல்ல, — மக்கள் வாழ்வைப் பற்றியே கவலைப்படாத வெறும் போலீஸ்காரனல்ல என்ற கருத்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதிலிருந்துதான் மக்கள் நல ஆட்சியே உருவாகியது.

மக்களுடைய கையிலேயே ஆட்சிப் பொறுப்பு இருந்து, மக்களுக்குள்ளே உண்மையான சமத்துவம் நிலவி, எல்லோருடைய நலன்களும் சரிவரக் கவனிக்கப்பட்டு, எங்கு சமூக சேவை செய்யும் அரசாங்கம் இருக்கிறதோ, அங்கு மக்கள் நல ஆட்சி இருக்கிறதென்று சொல்லலாம்.

வருமானம் நின்றகாலத்தில் உதவி —இது எவரும் விரும்பும் அவசியமான பாதுகாப்பு. இதுதான் மக்கள் நல ஆட்சியில் அரசாங்கம் கவனிக்க வேண்டிய முதல் காரியம்.

ஒருவன் ஆலையில் வேலைபார்க்கும் தொழிலாளியாக இருந்தாலும் சரி, அல்லது சொந்தத்தில் முதல் போட்டு சிறிய தொழில் நடத்துபவனாயிருந்தாலும் சரி, ஒரு சிறிய கடையோ, வியாபாரமோ வைத்து நடத்துபவனாக இருந்தாலும் சரி, அவன் நோய்வாய்ப்பட்டதாலோ, அல்லது அவனிருக்கும் வேலை போய்விடுவதாலோ, தொழில் நஷ்டமடைவதாலோ அல்லது வயதாகி வேலை செய்ய இயலாமற்போய் விடுவதாலோ, அவனுக்கு வருமானம் நின்றுவிடலாம். வருமானத்திற்கு வழியின்றி அவன் பட்டினிகிடக்க நேரிடலாம். மக்கள் நல ஆட்சியில் எக்காரணத்தை முன்னிட்டும் எந்த ஒரு பிரஜையும் இவ்விதம் வருமானமின்றி வருந்துவதற்கு அரசாங்கம் விடுவதில்லை. ஏதோ ஒரு காரணத்தால் ஒருவனுக்கு வருமானம் நின்று போய், குடும்பத்தைக் காப்பாற்றுவதற்குக் காலணாக்கூட இல்லாமல், பிச்சை எடுப்பதற்கும் மானத்தை இழப்பதற்கும் மனமின்றி மடிந்து கொண்டிருக்கும் காட்சியை நாம் இங்கெல்லாம் அடிக்கடி பார்க்கிறோமே, அது இருக்காது மக்கள் நல ஆட்சியில்.

வேலை செய்யத் திறனிருந்தும், உழைக்கப் பிரியமிருந்தும், வேலை கிடைக்காமல், தரித்திரத்தின் அணைப்பிலேயே தவழ்ந்து, ரோடு ஓரங்களில் நிரந்தரமாக இருக்கையை ஏற்படுத்திக்கொண்டு, மண்ணிலே நெளியும் புழுக்களாய் வாழ்கின்றவர்களை இங்கெல்லாம் — அக்கோரக் காட்சிகளைக் காணமுடியாது மக்கள் நல ஆட்சி நடக்குமிடங்களில்.

மக்கள் நல ஆட்சி நடக்கும் பிரிட்டனில், வேலையிழந்ததாலோ, நடத்திவந்த தொழில் நின்றதாலோ, உடல் நலம் குன்றியதாலோ, அல்லது முதுமையால் உழைக்க முடியாததாலோ ஒருவன் வருமானத்தை இழந்துவிட்டால், அவனுக்கு அரசாங்கம் ஒரு வாரத்துக்கு 20 ரூபாயும், அவன் மனைவிக்கு 12 ரூபாயும் மான்யமாகக் கொடுக்கிறது. இந்த மான்யத்தொகை, ஏதோ அரசாங்கத்திடம் கையேந்திப்பிச்சையெடுப்பதைப் போலவோ அல்லது அரசாங்கம் இரக்கப்பட்டு தயவாகத் தானம் செய்வதைப் போலவோ அல்ல. நம் நாட்டில் உடல் நலம் பாதிக்கப்பட்டால் உடனே உரிமையுடன் தயக்கமின்றி ஏழையிலிருந்து சீமான்வரை அரசாங்கத்தாரால் நடத்தப்படும் மருத்துவ விடுதியில் மருந்து வாங்கி சாப்பிடுகிறோமே அதுபோல பிரிட்டனில் வருமானம் நின்ற உடன் பெயரைப் பதிவு செய்துகொண்டு, அரசாங்கத்திடம் இந்தத்தொகையை மக்கள் உரிமையுடன் பெறுகின்றனர்.

ஏழைகளுக்குச் சாதாரணமாக மனதைச் சதா உறுத்திக் கொண்டிருக்குமே கவலை, அதாவது நாம் ஒன்றும் சேமிக்க முடியவில்லையே, நாளை ஒரு நோய் வந்தால் எவ்விதம் குடும்பத்தைக் காப்பாற்றுவது, திடீரென்று வேலையிலிருந்து தள்ளப்பட்டால் மனைவி மக்கள் என்னாவது, தள்ளாத காலத்தில் இவ்வளவு பெரிய குடும்பத்தை வைத்துக் கொண்டு எப்படிக் காலந்தள்ளுவது என்று எப்பொழுதும் அவர்கள் மனதை அரித்துக் கொண்டிருக்குமே; இந்த வியாதி பிரிட்டனில் கிடையாது. பிரிட்டனில் உள்ள 4½ கோடி மக்களில் எவரும் பட்டினி கிடக்கக் கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது அரசாங்கம். இதுவே மக்கள் நல ஆட்சியின் அடிப்படைத் தத்துவம்.

எக்காரணத்தினாலாவது பிரிட்டனில் ஒருவனுக்கு வருமானம்போதவில்லை என்றால்—அதாவது ஒரு தனி மனிதனுக்கு வாரத்துக்கு 20 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் என்றால்—அவனுக்கு தேசீய நிவாரணத்திட்டத்தின்படி அந்த 20 ரூபாய்க்கு அவன் வருமானம் எவ்வளவு குறைகிறதோ அந்தப் பணம் கொடுக்கப்படும். அதாவது எக்காரணத்தை முன்னிட்டும் பிரிட்டிஷ் பிரஜை எவனும் வாரத்துக்கு 20 ரூபாய்க்கு குறைவில்லாமல் வருமானம் அடையும்படி அரசாங்கம் பார்த்துக் கொள்கிறது.

வேலையில்லாதவர்களுக்கு அரசாங்கம் பண உதவி செய்கிறதே, அதனால் வேலையில்லாதவர்கள் வேலை தேடாமலே இருந்து, இந்த உதவியை எப்பொழுதுமே எதிர்பார்த்துச் சோம்பேறிகளாகிவிட்டால் என்ன செய்வது? கேட்க வேண்டிய கேள்வி.

பிரிட்டனில் அவ்வாறு மக்கள் சோம்பேறிகளாக மாறுவதைத் தவிர்க்க, எவனொருவன் ஆறுமாதத்துக்குள் வேலை தேடிக்கொள்ளாமல் இருக்கிறானோ அவனுக்கு ஆறு மாதத்து முடிவில் 20-ரூபாய் கொடுப்பதை நிறுத்திவிட்டு அவன் அத்தியாவசியத் தேவைகள் என்னவோ அவைகளை அவன் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினால் அதற்குத்தக்கபடிதான் உதவியளிக்கப்படும். இது மிகவும் சங்கடமான நிலை. குடும்பக்காரியங்கள்— அதையொட்டிய விவரங்களையெல்லாம் அரசாங்க அதிகாரிகளுக்குத் தெரிவிப்பதற்கு கூச்சப்பட்டுக் கொண்டு இந்த நிலைக்கு வருவதற்கு யாரும் விரும்புவதில்லை. (இன்னும்வரும்)

யோகாப்பியாசம்

பரதன்

நாட்டில் நடப்பது

கண்களில் நீர் கோப்பளிக்கிறது, காரிகைக்கு!

இந்த உலகம் எம்மாத்திரம், மேலே ஐயனுடைய அருளுலகம் இருக்கிறது, என்னை அழைக்கிறது என்று கூறிடுவதுபோல, கெம்பீரமாக நிற்கிறார், யோகி!

*

அவன் யோகியல்ல, காமாந்தகாரன், என் கற்பைச் சூறையாடிய பேயன், மோட்சலோக வழிகாட்டி என்று வேடமிட்டுக்கொண்டு ஊரை ஏய்க்கிறான் இந்த எத்தன், என்று கூறுகிறாள் குமாரி. அவள் குரலிலே கோபத்தைவிட வேதனையே அதிகமாகத் தோய்ந்திருக்கிறது.

*

வழக்கு மன்றமோ, இந்திரியங்களை அடக்கி ஆண்டு, இகத்தை வெறுத்தொதுக்கி பரலோக இன்பம் தேடும் பரமாத்மாவாகக் காட்சி தரும் இந்த யோகீஸ்வரர், இளம் பெண்ணை இம்சைக்கு ஆளாக்கி, கற்பெனும் கனிமலரைக் கசக்கி எறிந்திடக்கூடியவரா! பெண் பேசுவது கேட்டால், மனம் பதறுகிறது. அலறித் துடித்து அழுதேன், அவன் அஞ்சாதே, அஞ்சுகமே! என்று குளறிக் குளறி என்னைக் கட்டிப் பிடித்திழுத்துக் கட்டிலறை சென்றான், என்று பெண் கூறுகிறாள்—கேட்கும்போதே, காதகனைக் கொன்று கழுகுக்கு விருந்தாக்க வேண்டும் என்று தோன்றுகிறது, ஆனால் மறுகணமோ, இம் மாதவனைக் கண்டாலோ, அருளொழுகும் கண்ணுடையான், அவனி உய்ய அருமறைகள் பல அளித்திடவல்லான், என்றே எண்ணம் பிறக்கிறது! கடை கெட்ட கயவனும் செய்யக் கூசும் செயலே, இந்த யோகீஸ்வரர் செய்வாரா! எப்படி நம்புவது! என்று யோசிக்கிறது—திகைக்கிறது.

*

யோகீஸ்வரர் மிகுந்த செல்வாக்குள்ளவர்.

அரச குடும்பத்தினர் அவர் அடி பணிந்தனர்.

ஆலயங்களில் சென்று தேவதேவனைத் தொழுவதால் உண்டாகும் பலன், இவர் அடிபணிந்தால் கிட்டும் என்று நம்பினர், மேட்டுக்குடியினர் பலப் பலர்.

இந்த உலகை, நான் என் கால் தூசுக்குச் சமானமாக மதிக்கிறேன், என் இராஜ்யம் இங்கு இல்லை, அதோ இறைவன் அழைக்கிறான் என்னை, என்று இடம்புகிறார்!

ஈனத்தனமான காரியம் செய்வோர், இறைவனால் தண்டிக்கப்படுவர்.

உத்தமமான தவ மார்க்கம் மேற்கொள்ளுங்கள்.

ஊருக்கு உழையுங்கள், அது மேலான தவமாகும்.

எம்மான், வரமருளக் காத்துக் கிடக்கிறார், எனவே, நற்செயலாற்றி நாதன் அருளைப் பெறுவீர்!

ஏகாந்தத்தில் அமர்ந்து, என் சித்தமதில் குடிகொண்ட சின்மயானந்தப் பொருளுடன் பேசி மகிழ்கிறேன், நான்—நீவிரும் அந்தப் பெரும் பேறு பெறலாம், என் மொழிவழி நடந்திடின்.

ஐயன் பெருமைகளையும் அறநெறியையும் இதுபோல அந்த யோகீஸ்வரர் எடுத்துரைத்து வந்திருக்கிறார்.

*

ஒரு பெண் கூறுகிறாள், இவன் யோகியல்ல, போகி! தவசி அல்ல, தூர்த்தன்! கடவுள் அருள்பெறும் வழி உரைப்போனல்ல, கற்பழிக்கும்

காதகன்! என்று. பெண் பேசும் போது, குரலே காட்டுகிறது, அவள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டவள், என்பதை. கோலத்தைக் கண்டாலோ, யோகீஸ்வரர், இத்தகைய தீச்செயலை மனதாலும் எண்ணிடக்கூடியவர் அல்ல, என்று தோன்றுகிறது. வழக்கோ நடைபெறுகிறது!! டில்லியில்! இப்போது!!

*

இவரைச் சாமான்யமாக எண்ணாதே! சாது சன்யாசிகள், மந்தை மந்தையாக உள்ளனர்—அவர்களில் இவர் ஒருவர் என்று எண்ணாதே, இவர், வேதாந்தம் பேசக்கற்றுக்கொண்டு, வேடமிட்டு காணிக்கை தேடும் பரதேசி அல்ல! பகவத் கடாட்சத்தைப் பரிபூரணமாகப் பெற்றவர்! பைத்யமே! இவர், பகவானேதான்! பகவான், இந்த வடிவில்!! இவர், யார் என்பதை விளக்கமாகக் கூறுகிறேன் கேள், அன்று ஆயர்பாடியில் ஆநிரைகள் மேய்த்து, காளிங்கமடுவில் குதித்து நர்த்தனமாடி நாசப்பாம்பைச் சாகடித்து, பாலூட்டிக் கொல்லவந்த பூதகியைக் கொன்று, புன்னைமரமேறிப் புல்லாங்குழல் ஊதி, பூவையரின் சேலைகளை எடுத்தொளித்து விளையாடிய கோபாலகிருஷ்ணன், இவர்! நாமெல்லாம்—நீயும்தான்—கோபிகைகள்! கோபிகைகளடி நாம், கோபிகைகள்! முற்பிறப்பில், நாம் பிருந்தாவனத்தில் கிருஷ்ண பகவானுடன், கோலாட்டமாடிக் கோலாகலமாகக்களித்திருந்தோம். கலிகாலம் இது. எனினும், கண்ணன் வந்திருக்கிறார் நம்மை மகிழ்விக்க! நாம், கோபிகைகளாக முன்பு இருந்ததால், இப்போது நமக்கு, பகவானுடன் ஆடிப்பாடி இன்பம் காண வழி கிடைத்தது! கோபிகா! கோபிக்காதே, பயப்படாதே! பகவான் அழைக்கிறார்! பரந்தாமன் அழைக்கிறார்! நமது நாதன் அழைக்கிறார்! பகவான் மனமகிழ நடந்துகொள்! பிருந்தாவன லீலைகளை, மீண்டும் காணலாம்! கார்மேகவண்ணன் நமது கரம் தொட்டாலே, புளகாங்கிதமாகும்! போடி, பெண்ணே! போ! பகவான் அருள்பாலிக்க அழைக்கிறார்! அந்தச் செந்தாமரை முகத்துடன் முகம், அதரத்தில் அதரம்......... விளக்கமாகவா கூறவேண்டும், அந்த ஆனந்த கிருஷ்ணனுடைய அணைப்பிலே உள்ள சுகம் அறிய, பேதைப் பெண்ணே! உனக்குப் பாக்யம் இருக்கிறதே! போடி, நடுக்கம் ஏன்? அவர் நமது நாதன்! பகவான் கிருஷ்ணன்! நீ, கோபிகா! கோபிகை கொஞ்சம் ரமணன் வந்திருக்கிறார்! தவம் பலித்தது என்று எண்ணிக்கொண்டு, தவசி வேடமிட்டு வந்துள்ள வேணுகானனைப் பூஜை செய்யப் புறப்படு! மலர்கொண்டு அர்ச்சிக்கும் பக்தர்கள், கோடி கோடியாக உள்ளனர், ஆனால், மதுரமொழிகொண்டு அர்ச்சிக்கும் வாய்ப்பு, உனக்குக் கிடைத்திருக்கிறது. கோவர்த்தன கிரியைத் தூக்கிக் குடையாகப் பிடித்த அந்தக் கரம், உன் கூந்தலைக் கோதி, கன்னத்தைக் கிள்ளி......எவருக்கடி கிட்டும் அந்தப் பாக்யம்!

*

யோகீஸ்வரர், சாட்சாத் கிருஷ்ணனின் அவதாரம் என்று நம்பி, பகவான் என்று அவரைப் பக்தியுடன் அழைத்து, அவர் பாதம் வருடுவது பெரும் பாக்யம் என்று எண்ணி, அவர் எந்த மங்கையை மஞ்சத்துக்கு அழைத்தாலும் அந்த மங்கை கோபிகையாகிவிடுகிறாள். ஏனெனில் அவர் கோபாலகிருஷ்ணனின் அவதாரம், என்று நம்பி, பூஜித்துவந்தவர்கள் ஏராளம்.

கற்பைச் சூறையாடிவிட்டான், இந்தக் காதகன், என்று குற்றம் சாட்டினாளே குமாரி, அவளுக்கே, இந்த யோகி, கிருஷ்ணபகவான், என்று உபதேசம் செய்திருக்கிறாள் யோகியின் சிஷ்யை — அரச குடும்பத்தவள்!

அரச குடும்பத்தவளைச் சிஷ்யையாகக்கொண்ட யோகி, செங்கனியையும் விடமறுக்கும் போக்கினர். பதினெட்டு வயதுப்பாவை, அகதிக் குடும்பம், வகுப்புவெறியால் வேட்டையாடப்பட்டு 'புண்யபூமி' வந்து சேர்ந்தவள், தாயுண்டு கண்ணீர் வடித்தபடி, அண்ணன் உண்டு, யோகியிடம் கணக்குவேலை பார்த்து வந்தான், இவளோ இளமங்கை, அவளை நல்ல நிலைமைக்குக்கொண்டு வரும் பொறுப்பை, யோகி ஏற்றுக்கொண்டதுகண்டு, தாய் பூரித்துப் போனாள் — மகளும் மகிழ்ந்தாள், வறுமை கொட்டாது, வாட்டம் துடைக்கப்படும், வாழ்வு கிடைக்கும் என்று எண்ணினாள். யோகியின் உள்ளம், பாபம், அந்தப்பெண்ணுக்கு என்ன தெரியும்! வாலிப முடுக்கும், அரும்பு மீசையும், ஆளை மயக்கும் பேச்சும் கொண்டவன், உன்னை நான் காப்பாற்றுகிறேன் என்று கூறி இருந்தால், பெண்ணும் தாயும் பேரிடி இது என எண்ணி, வேண்டாமப்பா! நாலு வீடு பிச்சை எடுத்தாவது பிழைத்துக் கொள்கிறோம், மானத்தை இழக்க மாட்டோம், கன்னியைக் காப்பாற்றும் கருணாமூர்த்தியா, நீ! உன் கூட்டுறவே வேண்டாம், என்று கூறி, வாலிபனை விரட்டிவிட்டிருப்பர். வாழ்வளிப்பதாகக் கூறியவரோ யோகீஸ்வரர்! உலகம் மாயை என்று உணர்ந்தவர், உபதேசிப்பவர்! எனவே, அவருடைய அழைப்பை பேறு என்று எண்ணினர், கசிந்து கண்ணீர்மல்கி, கைகூப்பித் தொழுதனர். காமுகன் உள்ளே இருக்கிறான், வெளியே தெரிவது, யோகி, என்ற மர்மம் அவர்களுக்கு என்ன தெரியும்!

இளமையும் எழிலும் குலுங்குகிறது—ஆதரவற்ற அணங்கு—அகதிப் பெண்! யோகீஸ்வரர், மனமெலாம் அரிப்பு! சரியான விருந்து! இன்பமயமான வாய்ப்பு! என்று எண்ணினார், மங்கையை அழைத்துச் சென்றார். அவரைப் பகவான் கிருஷ்ணன் என்றும், அவருடைய சரசம் கிடைக்கப் பெற்றால், தம்மை கோபிகைகள் என்றும், மூடபக்தி காரணமாக நம்பியிருந்த ஒரு அலங்காரவல்லியின் அரண்மனை சென்றார், யோகீஸ்வரர், கனியுடன்! அரண்மனைவாசி, அந்த இளநங்கையைக்கண்டு உவகைகொண்டு, "உன் பாக்யமே பாக்யம்! யாருக்கடி கிட்டும் இந்த வைபோகம்! பகவான் கிருஷ்ணனுக்குச் 'சேவை' செய்யக் கொடுத்துவைத்தவளடி நீ! பூர்வஜென்ம பலன்!" என்றெல்லாம் கூறினாள், பெண் திகைத்தாள். பிழைக்க வழியற்று, ஆதரிப்பாரற்றுக் கிடந்தோம், நம்மைக் காப்பாற்றுவதாகக் கூறி அழைத்து வந்திருக்கிறார் சாமியார், அவர் தமது

செல்வாக்கினால், எங்காவது மாளிகையிலே பணிப்பெண் வேலை கிடைக்கச் செய்வார், அல்லது அனாதை ஆஸ்ரமத்தில் சேர்த்து, படிப்பும் தொழிலும் கற்றுக்கொடுத்து, பிழைக்கும் மார்க்கம் காட்டுவார், மலர் மாலைகள் தொடுக்கச் செய்து அதைத் திருக்கோயிலுக்குத் தந்து, அதிலே கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு, பிழைக்கும் வழி காட்டுவார், என்று ஏதேதோ எண்ணிக்கொண்டாள். யோகீஸ்வரர், அந்த இளமங்கையை இப்படிப்பட்ட தொழிலுக்காகவா, கொண்டு வந்தார்! அங்கம், தங்கம்! காணும்போதே, அவர் உள்ளம் பொங்கும் கடலாகிறது. களங்கமற்ற பார்வை, அதைக் காணும் போதே, அவருக்கு இன்பலோகம் தெரிகிறது. நல்ல பருவம்! வண்டு தொடா மல்லிகை!! யோகீஸ்வரர், அந்தப் பெண்ணிடம் எதிர்பார்த்த 'சேவை' வேறு! ஆனால், அந்த மங்கை நல்லாள், இதைப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை! கவ்வும் பார்வையைச் செலுத்துகிறார், யோகீஸ்வரர், ஏன் இவர் இப்படிப் பார்க்கிறார் என்று அவள் அதிசயப்படுகிறாள். அருகில் அழைக்கிறார், கூசிநின்றுச் செல்கிறாள்! மெள்ளச் சிரிக்கிறார், அவள் மிரளுகிறாள்! மேனி இனி செப்பொன்னாகும் என்கிறார், வயது என்ன? என்று கேட்கிறார், இனியும் வாட்டம் ஏன்? என்று உற்சாகமூட்டுகிறார், கனி கொடு, காய்ச்சிய பால் கொடு, என்று ஏதேதோ கேட்கிறார்! உலகமறியாப் பெண்! ஒரு துளியும் சந்தேகமின்றிப் பழகுகிறாள். அவள் அவ்விதம் பழகப் பழக, யோகியின் பசி, அகோரமாகிறது! பெருமூச்செறிகிறார். தொட்டால் துவள்பவளாகத் தெரியக் காணோம்! தொடாதிருந்தாலோ, மனம் படாத பாடுபடுகிறது. வாழ்க்கையின் இரகசியம் தெரியவில்லை இந்தப் பெண்ணுக்கு, அதனையும் நாமே உபதேசிக்கத்தான் வேண்டும்போலிருக்கிறது, என்று எண்ணினார், பெண்ணைப் போகப் பொருளாக்கும் போர் முறையில் ஈடுபட்டார், பெண் பீதிகொண்டாள்! ஐயபோ! சாமியாரே! இதென்ன, இப்படிக் கட்டிப் பிடித்துக்கொள்கிறீரே, மூச்சுக்கூட விட முடியாதபடி! என்று அவள் கூறுகிறாள், "கற்கண்டே! உன்னைக் கட்டித் தழுவும்போது எனக்கு உண்டாகும் ஆனந்தம், ஆஹா! பிருந்தாவனத்தில் கோபிகையருடன் கொஞ்சி விளையாடியபோது ஏற்பட்டதுபோலவே இருக்கிறது. நீ மட்டும் யார்? கோபிகைதான், குமாரி! கோபிகைதான்! நான்தான் கோபாலகிருஷ்ணன்" — என்று கொஞ்சுகிறார். கன்னத்தை ஏன் கிள்ளுகிறார் என்று கலக்கத்துடன் கன்னி யோசித்துக்கொண்டிருக்கும் போதே, அடா அடா, அதரத்தை ஏதேதோ செய்கிறாரே, ஜெபமாலை ஏந்தும் அந்தக் கரம், செச்சே! இப்படி எல்லாமா செய்வது, ஆரத் தழுவிக்கொள்கிறார், அடி வருடுகிறார், அஞ்சாதே என்கிறார், வெட்கமா, பயமா, என்று கேட்கிறார்,... ......பெண் இப்படி எல்லாம் எண்ணும்படி, செயலில் ஈடுபடுகிறார், யோகீஸ்வரர். சீறலானாள் சிறுமி! சிரித்தார் யோகி! என்னை விட்டுவிடு, நான் என் தாயிடம் போகிறேன், என்று கூவுகிறாள்—குவியும் வாயில் முத்தம் பதித்துவிடுகிறார். ......பிறகு? பிறகா!! யோகாப்பியாசம்!! வேறென்ன! விம்மினாள், வியர்த்தாள், வெட வெடத்தாள், சோர்ந்தாள், துடித்தாள், இன்பம் குடித்த யோகி, இதற்கும் முன்பு கண்ட இன்பங்களுக்கும் உள்ள வித்யாசம் யாது, என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டார்!

பேதைப் பெண்ணே! பீதிகொண்டு, ஏதேனும் உளறினால் சர்வநாசம் சம்பவிக்கும்படி செய்துவிடுவேன். உன் தாய் படுகோரணமாவாள்! அண்ணன் அதோகதியாவான்! என் யோகவலிமையால், உங்களைத் துவம்சம் செய்துவிடுவேன். இங்கே நடைபெற்றது குறித்து மூச்சுவிடாதே, ஜாக்ரதை! என்றுமிரட்டினார். மாதருக்கு அணிகலனான கற்பு இக்காதகனால் சூறையாடப்பட்டது, விளங்கிவிட்டது, வனிதைக்கு. புலியாகி இந்த பாபாத்மாவைப்பிய்த்துப் போடலாமா என்ற அளவுக்குக் கோபம் பிறந்தது! பேயன் இந்த தீச்செயல் செய்திருக்கிறான், பேதைகள் அவனடி தொழுது அருள்வேண்டி நிற்கிறார்கள்! என் அடிவருடிக்கிடக்கிறான் இந்தக் காமுகன், அவனைப் பகவானே! என்று அர்ச்சிக்கிறார்கள், புத்தியற்று! என்று எண்ணினாள், கசங்கிய மலர்! காமுகனோ, மும்முறை அவளைச் சீரழித்தான், மேலும் விருந்துண்ண ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தான். எப்படியோ வழிகண்டுபிடித்து, தாயிடம் வந்து சேர்ந்தாள் பெண்!

அம்மா! அந்த அக்ரமக்காரன்...

என்னடி, கண்ணே! என்ன செய்தான்?

மோசம் போனேனம்மா!

பெண்ணின் கண்ணீர் தாய்க்கு விஷயத்தைத் தெரிவித்துவிட்டது. நாட்டிலே இப்படிப்பட்ட நாசகாலர்கள், யோகிகளாக உள்ளனரே, காமாந்தகாரனைக் கடவுள் அருளுக்கு வழிகாட்டுவோன் என்று எண்ணிக் கைகூப்பித் தொழுகின்றனரே, நாடு இப்படிப்பட்ட கயவஞ்சகர்களை, பெண்களைக் கெடுக்கும் பாதகர்களை, எப்படித் தாங்கிக்கொள்கிறது. கள்ளமில்லா உள்ளம் கொண்ட என் பெண்ணை, இக்கதிக்கு ஆளாக்கினானே, இவனுடைய அக்ரமத்தை அம்பலப்படுத்தியே தீருவேன், மக்கள் உண்மையைத் தெரிந்துகொள்ளட்டும், வேடதாரிகளை விரட்டட்டும், மதவேடமிட்டு மதோன்மத்தராக அலையும் மாபாவிகளின் கொட்டத்தை அடக்கட்டும், இதோ என் மகளைக் காணட்டும், மாசற்ற இந்த மணியை அந்த நீசன் கெடுத்ததை அறியட்டும். நீதி வழங்கட்டும், தர்மத்தை அழித்திடும் இத்தகைய துராத்மாக்களைத் தூக்கிலே மாட்டட்டும், நாடு விழிக்கட்டும், என்றெல்லாம் எண்ணினாள், துணிந்து வழக்குத்தொடுத்திருக்கிறாள். வழக்கு இப்போது, டில்லியில் நடைபெறுகிறது. சம்பவம், மதவேடமிட்டு மாபாதகம் புரிபவர் பற்றியதாக இருப்பதால், நமது 'தேசிய ஏடுகள்', செய்தியை இருட்டடித்துவிட்டன. வடநாட்டு பத்திரிகைகளிலே செய்தி வெளிவந்திருக்கிறது,

*

காவி கமண்டலதாரிகள் இதைப்போல அக்ரமம் செய்வது அடிக்கடி அம்பலமாகிறது! மக்கள் கொதித்தெழுகின்றனர், கோடிய

(அடுத்த பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 8—8—54 [ஞாயிறு

ஏன், அப்படி?

★

அகதிகளாக வர இருக்கிறார்களாம்!—டில்லி அமைச்சர் தேஷ்முக் தெரிவிக்கிறார். தென்னகத்திலிருந்து சென்று இலங்கைத் தோட்டத்தில் வியர்வை சிந்தி உழைத்தவர்கள் பலர் தாயகத்துக்கு திருப்பி அனுப்பப்படப்போகிறார்களாம்!! அவர்களுக்கு 'அகதிகள்' என்னும் பட்டமளிப்பு செய்திருக்கிறார், பண்டிதரின் சகா. அந்த 'அகதிகள்' வந்தால் அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து இங்கேயே வாழவைக்கும் பணிகளை சென்னை சர்க்கார் செய்யுமாம்! செப்புகிறார் டில்லி அமைச்சர்!!

இலங்கையிலிருந்து இங்குவரும் திராவிட மக்களுக்கு வாழ்வுதரும் பொறுப்பை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு சென்னையுடையதாம்! 'அகதிகள்' என்ற பெயரால் லட்சக் கணக்கானோருக்கு கோடிக்கணக்கான ரூபாயைக் கொட்டியளந்தனரே வடநாட்டில் — அதனை மறந்துவிட்டோம் என்ற கருத்தில் டில்லியார் கூறுகிறார்!! வடநாட்டிலே இருப்பவரின் வாட்டத்தைத் துடைப்பதென்றால், அது மத்திய அரசின் வேலை — தென்னாட்டிலே தொல்லைகள் ஏற்பட்டால், அது மாகாண அரசின் பொறுப்பு. எவ்வளவு விந்தையான பேச்சு! நயவஞ்சகமான போக்கு!!

பெங்களூரில் நடைபெற்ற நிருபர்களிடம் இவ்வண்ணம் செப்பினாராம் 'தேஷ்முக்'—அதுபற்றி காங்கிரஸ் ஏடாம் 'தினமணி' "அவர்கள் இப்பொழுது நாடு திரும்புவது எதன் விளைவாக என்பதைக் கவனிக்க வேண்டும் டில்லி ஒப்பந்தம்செய்து கொள்ளப்பட்ட அவசரக் கோலமும் அதன் விளைவுகளுமே இதற்குக் காரணம். அதாவது இந்தியர் வாபசாவது டில்லி மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவு" என்று திட்டி, டில்லியின்போக்கை வெளிப்படுத்தியிருக்கிறது.

இலங்கைவாழ் தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தருவதில் டில்லி நடந்து கொண்ட முறையினை, நாம் கண்டித்தே வந்துள்ளோம். அந்த டில்லி, அக்கிரமமான உடன்பாட்டுக்கு சம்மதித்ததோடு, அதனால் ஏற்படும் பலாபலன்களை மாகாண அரசுக்கு வழங்க முற்படுகிறது! அப்பப்பா...பாகிஸ்தான் பிரிவினையின்காரணமாக ஏற்பட்ட அகதிகள் பிரச்சனையை சமாளிக்க எத்தனை ஆர்வம் காட்டிற்று இந்த டில்லி! நம்முடைய விஷயம் என்றால் எவ்வளவு அசிரத்தை காட்டப்படுகிறது!! —எண்ணிப் பார்க்கக் கோருகிறோம், டில்லிக்கும் நமக்கும் ஒத்து வராது என்று சொன்னால் சீறிடும் தோழர்களை.

★

முன்பக்கத் தொடர்ச்சி

வனைக் கொன்று போடக்கூடக் கிளம்புகின்றனர். சுயநலம், சூது, சூழ்ச்சி, சுகபோகம் ஆகியவைகளுக்கு இருப்பிடமாய், 'சாமியார்'கள் இருப்பது, வெளியே தெரிந்ததும், வெகுண்டெழுகிறார்கள், மக்கள்—ஆனால், அவனை அடக்கியதும், மீண்டும் வேறோர் காவிகட்டியைத் தேடி அலைகிறார்கள், தெளிவு நிலைப்பதில்லை, இத்தகைய தீய முறையையே ஒழிப்போமே என்ற தைரியம் பிறப்பதில்லை, மீண்டும் மீண்டும் உளைச் சேற்றிலே சிக்கிச் சீரழிகின்றனர். டில்லியில் ஒரு யோகீஸ்வரர், நடாத்திய பிருந்தாவன லீலை, வழக்கு மன்றம் வந்ததால், 'பக்தர்கள்' இவன் ஒரு போலி, என்று கூறுகின்றனர், ஆனால் சூது வெளிப்படும் வரையில், எவ்வளவு அர்ச்சனை, எவ்வளவு ஆராதனை, குவிந்த காணிக்கை எவ்வளவு, கும்பிட்டது எவ்வளவு சிரத்தையுடன்! ஒரு அகதிப் பெண் மூலம், அக்ரமம் வெளியேதெரிந்தது, முழுத் தெளிவு ஏற்பட்டதா! அதுதான் இல்லை! யோகிஸ்வரர்கள் வேறு இடங்களிலே, உலவிக் கொண்டுதான் இருக்கிறார்கள்!! பூஜைகள் நடந்தவண்ணம் உள்ளன! பூவையர், என்ன கதியாகிவருகிறார்களோ, யார் கண்டார்கள்! மக்களின் மனதிலே, டில்லி யோகீஸ்வரின் சூது வெளியானபோது, கோபம் கொதித்தெழுகிறது, ஆனால், ஜெபமாலையைக் கண்டதும், காவி கமண்டலத்தைக் கண்டதும், ஏற்படும் மனமயக்கம், ஒழிந்ததா என்றால், அதுதான் இல்லை! இந்த மனமயக்கம் இருக்கும் வரையில் அகப்பட்டதை அனுபவிப்போம் என்று திட்டமிட்டுச் செயலாற்றும் ஆண்டிக் கூட்டம் அட்டகாசம் செய்துதான்வரும்! எல்லா அக்ரமங்களுமா, வழக்கு மன்றம், செல்ல முடியும்!!

ஆண்டுக்கோர் முறையேனும், இத்தகைய இழிசெயல் புரியும் பரலோக ஏஜண்டுகளின் மோசடி வெளிப்படுத்தப்படுகிறது! எனினும் மக்களின் மனமயக்கம் ஒழிந்தபாடில்லை. ஒழுக்கம் ஓய்ப், மதம் தேவை, என்று தத்துவம் பேசும் மேதைகள், சன்மார்க்க நெறியினின்றும் மக்கள் தவறினால் சர்வ நாசம் சம்பவிக்கும் என்று மிரட்டிப் பேசும் மகான்கள், சாது சன்யாசிகளும், ஜீவன்முக்தர்களும், மும்மலம் அகற்றியோரும், முனிவர்களும், இப்புண்ணிய பூமிக்கே அணிகலன் என்று பெருமையாகப் பேசிடும் பெம்மான்கள், என்ன கூறுகிறார்கள், இந்த டில்லி சாமியாரின் மோசடி குறித்து! விஷயம் வெளியே தெரிந்துவிட்டதே, வெட்கமாகவும் இருக்கிறது, வேதனையாகவும் இருக்கிறதே, என்று விம்முவர்! பைத்யக்காரன், அந்தப் பெண்ணின் சம்மதத்தைத் தந்திரமாகப் பெற்றிருக்கக்கூடாதா, இப்படியா, தாறுமாறாக நடந்து கொள்வது, நம் அனைவருக்குமல்லவா தலையிறக்கமாக இருக்கிறது, என்று கூறிக் கைபிசைந்துகொள்வர்! ஒரு நாலு நாளைக்கு அக்கம் பக்கம் பார்த்து நடந்துகொள்வர்! அவ்வளவுதானே! யார் கண்டித்தனர்!

ஒரு நாத்திகனோ, பகுத்தறிவு வாதியோ, இப்படி ஒரு அக்ரமம் செய்திருந்தால், ஊர் திரண்டெழுந்து, கல்லால் அடித்தல்லவா கொன்றுபோட்டிருப்பர், மக்கள்!

எத்தனை மதத் தலைவர்கள், கண்களைத் துடைத்துக்கொண்டு, கம்மிய குரலில், "மெய்யன்பர்களே! பாபம் பெருகிவிட்டது! லோகம் இனி அழிந்தே போகும்! மஹாப் பிரளயம் நேரிடும்! மாபாவிகளை, மகேசனை இகழ்வாரை, மகிமைகளை கேலி செய்யும் மமதையாளரை, நாத்தழும்பேற நாத்திகம் பேசுவோரை, நாட்டிலே விட்டு வைத்திடலாமா, இறைவனைப் பழித்திடலாமா, இன்றே எழுக! சழக்கரை வீழ்த்துக! அவர்தமைக் கொன்றுபோடினும், பாபமில்லை, துஷ்ட நிக்ரஹம், புனிதமான கடமை!— என்றெல்லாம் ஆர்ப்பரித்திருப்பர்! ஆனால், இப்போது? குன்றக்குடியும் தருமபுரமும், என்ன செய்கின்றன! நாட்டிலே உள்ள பெரிய மடங்கள், குட்டி மடங்கள் ஏன் வாயடைத்துக் கிடக்கின்றன? ஒழுக்கம்பற்றி ஒய்யாரமாகப் பேசும் அறிவாளர்கள், ஆட்சிபீடத்தமர்ந்தோர், என்ன செய்கிறார்கள்? ஒவ்வொருவரும், சிவனருளால், தான் சிக்காதிருந்ததுபற்றிச் சந்தோஷமடைவரே தவிர, யார் முன் வருகிறார்கள், இத்தகைய நீசத்தனத்தைக் கண்டிக்க. கண்டிக்காததுமட்டுமா, புதிய புதிய யோகீஸ்வரர்களை, சித்து செய்பவர்களை, தேடியல்லவா அலைகிறார்கள்.. சாமான்யர் இது போல், தெளிவற்ற செயலில் ஈடுபடினும், படிப்பு இல்லை, எனவே, புரட்டுக் கண்டறியும் திறம் இல்லை என்று சமாதானம் கூறலாம். உலகம் சுற்றிய உயர்ந்தவர்கள், ஊராள்முறை கற்றவர்கள், விஞ்ஞானக் கூடங்களின் அதிபர்கள், இத்தகையோருமல்லவா, இந்த ஒரு துறையில், இளித்தவாயராகின்றனர்!

*

உயர்தர சர்க்கார் உத்யோகஸ்தர்கள், இந்த மடத்திலே நெருங்கிய தொடர்புவைத்துக்கொண்டுள்ளனர். இதனால், தைரியம் பெற்று, மடத்து ஆட்கள், சட்டத்தை மீறவும், சமூகத்தைத் தாக்கவும்கூடத் துணிவு பெற்றனர்—என்று கட்டாக் மடாலய கலாம் குறித்து, இப்போது பேசுகிறார்கள்.

கட்டாக் — ஒரு கடவுள் முகாமாக்கப்பட்டது, கபடர் சிலரால்— கருத்தற்றவர்களை ஏய்க்க முடிந்ததால்!

இந்த வட்டாரத்தில்தான் சென்ற ஆண்டு, ஒரு மாடு மேய்க்கும் சிறுவன், "தேவானுக்ரத்தால்" மரப்பட்டையைச் சர்வரோக நிவாரணியாக்கும் அற்புதம் நடத்துவதாக நம்பி இலட்சக்கணக்கானவர்கள், மகானைத் தரிசித்து வரச் சென்று, கடுமையான நோய்க்குப் பலியாகி மாண்டனர்! அவ்வளவு தெளிவு ததும்பும் வட்டாரம்!! கட்டாக் பகுதிமட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டத்திலேயே, நமது தாயகம் தவிர பிற அரசுகளில் பகுத்தறிவுப் பிரச்சாரம் ஓங்கி வளர்ந்ததில்லை, எனவே, ஆங்கெலாம் அறியாமையும் மூடநம்பிக்கையும் நாற்றமடிக்கத்தான் செய்கிறது! கட்டாக் வட்டாரம் தமக்கேற்ற வேட்டைக் காடு என்ற எண்ணத்திலேதான், அங்கு, பகல பாபா என்ற ஓர் ஆண்டி மடாலயம் ஒன்று அமைத்துக்கொண்டான். சிறு குன்றுகளில் உள்ள பிலம் தேடிப் பாம்பும், புதர் தேடி நரியும், குகை தேடிச் சிறுத்தையும் செல்வது போல, இந்த பகல பாபா இந்த இடம் தனது தொழிலுக்கு ஏற்ற வளமளிப்பது என்று கண்டறிந்

வெற்றி முரசு கொட்ட! **காஞ்சிக்கு வாரீர்!** வீரப் படைவரிசை காட்ட!

சமூக சீர்திருத்த மாநாடு	செங்கற்பட்டு மாவட்ட	அரசியல் மாநாடு
தலைவர்: கலைவாணர் N. S. கிருஷ்ணன்	தி. மு. க. மாநாடுகள்	தலைவர்: இராசு. தங்கப்பழம்
துவக்குபவர்: M. G. ராமச்சந்திரன்	ஆக. 21, 22	துவக்குபவர்: திருச்சி M. S. மணி
பொதுச் செயலாளர் அண்ணா கலந்துகொள்வார்.	சனி, ஞாயிறுகளில் கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில் மாபெரும் பந்தலில்	எல்லா தி. மு. க. தோழர்கள் வருகை தருவர்.

இரு நாட்களிலும் இயக்கப் பிரச்சார கலைவிருந்து உண்டு

செயலாளர்கள்:	வ. கு. தலைவர்:	பொருளாளர்:	தொண்டபடைத் தலைவர்கள்:
செ. கோ. பெருமாள்	C. V. M. அண்ணாமலை	R. பாபு	E. எத்துராசு
D. சபாபதி			B. சிவானந்தம்
இரா. வெங்கடேசன்			D. ராஜரத்தினம், J. A. வகாப்.

தான், இருபதாண்டுகளுக்குமுன்பு மடம் துவக்கினன், மக்களின் மூடபக்தியை 'முதல்' ஆகக் கொண்டு சூதுக்கோட்டை அமைத்துக் கொண்டான்.

அழகான ஆற்றோரத்தில் பிரம்மாண்டமான மடாலயம்.

மடாலயத்தைச் சுற்றிலும் நல்ல பூந்தோட்டம்.

மடாலயத்துக்குள்ளே மாடமும் கூடமும்மட்டுமல்ல, பதுங்குமிடங்களும் பலப்பலவாம்.

பகலபாபா, இதுவரை எந்த அருளாளரும் கூறிடாத மார்க்கம் உரைத்தாரா? மனிதகுல நல்வாழ்வுக்காகப் புதுத் திட்டம் தந்தாரா? காவிய கர்த்தாவா? இல்லை! இல்லை! இவைகள், சாமான்யம், பகலபாபா ஆண்டவன்! அவ்விதம் நம்பும்படி புரட்டரின் பிரசாரம் இருந்தது, ஏமாளிகள் நம்பினர், பகல பாபாவைத் தெய்வம் எனத் தொழலாயினர்! தேரும் திருவிழாவும், பூஜையும் சடங்கும் இந்த மடாலயத்துக்குத் தனியாக உண்டு! மகாநதிக் கரையில் தெற்குப் பகுதியில், இங்ஙனம் அமைக்கப்பட்ட மடாலயத்துக்குக்குத் தனியாக காளிபோதா மடாலயம் என்று பெயர், ஒரிசா அரசில், இந்த மடத்துக்குச் சீடர்கள் ஏராளம்.

சீடர்கள் ஏராளம் என்றால் என்ன பொருள்? காணிக்கை, குன்று போல! எனவே, மடம், கொழுத்தது. பகலபாபாவின் செல்வாக்கு உச்சநிலைக்குச் சென்றது. ஒரிசாவில் இரு அரசுகள்! ஒன்று, மக்கள் அமைத்துள்ள அரசு! மற்றொன்று மகான் பகலபாபா அமைத்த அரசு! இரு அரசுகளில், வலிவும் செல்வாக்கும், பகலபாபாவின் அரசுக்குத்தான் அமோகம்! எழுபதாண்டுக் கிழவன் இந்த பகலபாபா, அவரிடம் உபதேசம் கேட்டு, நன்னெறி அறிய அல்ல, அவரைத் தொழுது 'முக்தி' பெறவே, பக்தர்கள் திரண்டனர்!

பக்தர்கள் என்றால் படிப்பறியாதார் என்றல்ல, பொருள். காளிபோதா மடாலயத்தில் கூடிய பக்தர்களும், குடி ஏறிய சீடர்களும், பெரிய பதவிகளில் இருப்பவர்கள்! ஒரிசா சர்க்கார் அலுவலகங்களில் உயர்பதவி வகிப்போர் பலர் பகலபாபாவின் பக்தர்கள்! எனவே, மடாலயத்தாருக்கு, எதைப்பற்றியும் கவலையோ அச்சமோ எழுவதில்லை,

பகலபாபாவின் ஆட்கள்-கோலத்தால் ஆண்டிகள், குலத்தாலோ கயவர்கள்—மேலும் மேலும் மடாலயச் செல்வாக்கை அதிகப்படுத்த முனைந்தனர்.

மடாலயத்திலே, ஏதேதோ நடக்கிறது, எல்லாம் மர்மமாகவே இருக்கிறது, சட்டத்தைக்கூடத் துணிந்து மீறுகிறார்கள் மடத்து ஆட்கள், சர்க்கார்பற்றித் துளியும் மதிப்பளிப்பதில்லை, இந்த நிலை வளருமானல், பெருங்கேடாக முடியுமென்று, சற்றுத் தெளிவு உள்ளவர்கள் கூறினர், கேட்பார் இல்லை.

உயர்தர சர்க்கார் அதிகாரிகளே, மடாலயத்திலே சீடர்கள், எனவே, மடாலயத்தின்மீது கண் வைக்கவே பயந்தனர், போலீசார்.

இந்த நிலை, ஆணவத்தை அதிகப்படுத்திற்று, மடாலய ஆட்கள், கொடுமைகள் செய்யவும் தொடங்கினர்.

சிகார்பூர் என்றோர் சிற்றூர், அங்கோர் வாலிபன், பகலபாபாவின் ஆதிக்கத்துக்கு உட்படமறுத்தான். "உன் தந்தை, எமது ஆதீனம்" என்றனர் மடத்தாட்கள். "என் அறிவுசாகவில்லையே, நான் எப்படி அந்த மடம் புகுவேன்" என்றான் வாலிபன். மடத்தாட்களுக்குக்கடுங் கோபம் பிறந்தது. தங்களை எதிர்த்துப் பேசத் துணிந்தவனைச் சும்மா விடுவதா! நாடே நமது பகலபாபாவின் அடிபணிகிறது, இந்த நாய், எதிர்ப்பதா! காளிபோத மடாலயத்தின் முறை அறியாமல் பேசிவிட்டடான், இனி மடாலய முறையை இவன் காணட்டும்! கதறிக் கதறிக் காலடி வீழ்ந்து பகலபாபாவின் மன்னிப்புக் கோரும்படி செய்வோம், என்று சூள் உரைத்தனர், மடத்தாட்கள்.

மகேசனிடம் தங்களுக்குள்ள செல்வாக்கு காரணமாக, சீடனாக மறுத்தவனின்மண்டையில் குடைச்சல், மார்பிலே வலி, குன்மம், குஷ்டம், கண் அவிந்து போதல், போன்ற ஏதேனும் ஒரு 'விபத்து' ஏற்படும்படி செய்து, அவனைத் திருந்தச் செய்தனர்போலும் என்று எண்ணிடாதீர்கள்.

நடுக்காட்டிலே தீவர்த்திக் கொள்ளைக்காரர்கள் வணிகர்களின் பொருளைக் கவர்ந்து, அவர்களைத்தாக்குவதுபோல, மடத்து ஆட்கள் சிலர், கிராமம் சென்று, சீடனாக மறுத்தவனைத் தாக்கி, தடுக்க வந்தவர்களையும் பலமாகத்தாக்கி, அவனைத் தூக்கிக் கொண்டே சென்றனர், மடாலயத்துக்கு, சென்று அவனைக் குற்றுயிராக்கினர்.

இதுபோன்ற அக்ரமங்கள் வளரவே, போலீசார், இனியும் வாளா இருப்பது, சமூகத்துக்கே பெருங்கேடாக முடியும் என்று அஞ்சி, நடவடிக்கை எடுக்கலாயினர்.

கடந்த மூன்றாண்டுகளாகவே, மடாலயத்தார், இரகசியமாக, பயங்கரமான ஆயுதங்களைச் சேகரம் செய்து வருகின்றனர் என்று போலீசுக்குத் தகவல்! அருள் பெறும் இடத்தில், ஆண்டவனைத் தொழுதிடும் முறைகளைக் கற்றுத் தரும் ஆண்டிகள் வசிக்கும் மடத்தில், சுயநலம், செருக்கு, ஆசாபாசம் ஆகியவைகளை அறுத்துக்

காஞ்சி மாநாடு

மாவட்டக் கழகங்களுக்கு

ஒவ்வொரு கிளைக்கழகத்தினரும் கழகசட்டதிட்டப்படி, செயலாளர். மற்றும் இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து 15-8-54-க்குள் மாநாட்டு அலுவலகத்துக்கு அனுப்பக்கோருகிறேன். தீர்மானங்களையும் அனுப்பிவைக்கவேண்டுகிறேன்.

சி. வி. எம். அண்ணாமலை
மாவட்ட செயலாளர்:

*

தொண்டர்படையில் சேர...!

மாநாட்டுத் தொண்டர் படையில் சேர விரும்பும் உள்ளூர்-வெளியூர் தோழர்கள் 15-8-54-க்குள் 'திராவிடநாடு' அலுவலகத்தில் தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இ. எத்துராசு, பீ. சிவானந்தம்
டி. ராஜரத்தினம், ஜெ. எ. வகாப்.

கொள்ளவும், வாழ்க்கை நிலையாமை, தூய்மை, வாய்மை, ஒழுக்கம், உயர்பண்பு ஆகியவைகளைக் கற்றுக் கொள்ளவும் ஏற்படுத்தப்பட்ட பூஜாமாடத்தில், வாளும் வேலும், எறி ஈட்டியும், குத்துவாளும், துப்பாக்கியும் வெடிமருந்தும், எதற்காக? தூபதீப நைவேத்தியச் சாமான்களும், விதவிதமான ஜெபமாலைகளும், இருக்கும் இடமல்லவா, மடம்! ஆயுதம் ஏன் இங்கு? தீவினை அகற்றிட திரு அருள் நாடிடும் திவ்ய புருஷர்கள் தியானம் செய்யும் மடாலயத்தில், காட்டாளனிடம் இருப்பது போன்ற, தாக்கும் கருவிகள் எதுக்கு? எந்த நாட்டின்மீது படை எடுக்கப்போகிறார்கள்? மாயா உலகத்தின் பந்தத்திலிருந்து விடுபடமட்டுமே போராடும் புண்யர்களுக்கு, கொலைக் கருவிகள் ஏன்? என்று போலீஸ் எண்ணிற்று! மூன்றாண்டுகள் ஏதும் செய்யமுடியாதிருந்த போலீஸ், சிற்றூரில் செருக்குடன் புகுந்து, சட்டத்தைச் சட்டை செய்யாமல் பெருங்கலகம் விளைவித்ததைக் கண்டபிறகு, இனியும் வாளா இருப்பது அடாது என்று எண்ணி, குற்றம் புரிந்தவர்களைப் பிடித்திட மடாலயம் சென்றனர். அவர்கள் அங்கு கண்டது என்ன?

ஓம் நமசிவாயா! என்று பக்திததும்பப்பாடுவோனையும், ஊசிமுனைமீது நின்று தவம் புரிவோனையும், நெருப்புக் குண்டத்தில் இறங்கி நித்யானந்தனை ஜெபிப்போனையும், நோயுற்றோர்க்கு உதவப் பச்சிலை அரைத்திடுவோனையும், பச்சிளங் குழந்தைகளுக்கு உதவ பசுப்பால் சேகரிப்போனையும், பஜனை செய்வோனையும், கண்டனரா! இல்லை! மடம், என்றால் இவைகள் இருக்கும், என்றுதான் எவரும் எண்ணுவர். குடும்பத்தில் ஈடுபட்டவன், கண்ணீருக்கோ புன்னகைக்கோ, வளையொலிக்கோ, வாயமுதளிக்கும் குழந்தையின் குறுநடைக்கோ, ஏதோ ஒன்றுக்குச் சொக்கிப்போய், மகேசனை மறந்து, இந்த வாழ்வே சதம் என்று எண்ணி மாயாபந்தத்தில் அழுந்திவிடுகிறான், மடம் சென்றால், குடும்பப்பாசம், வாழ்க்கை ஊட்டும் மாயம் இவை பறந்தோடும், ஞானம் உண்டாகும், திரு அருளைத் தேடிப் பெறும் திறம் வளரும், என்று கூறப்படுகிறது. காளிபோத மடாலயத்திலே போலீசார் கண்ட காட்சி அவர்களைத் திடுக்கிட வைத்தது. பக்தர் கூட்டமல்ல, பாதகர்களைக் கண்டனர்! காவி உண்டு, ஆனால் காட்டுக் கூச்சலிட்டனர் அந்த மடாலயத்தார்! வாளை உருவினான் ஒரு ஆண்டி! வாய்க்கு வந்தபடி ஏசினர் பலர்! வில் அம்பு ஏந்தி நின்றான் வேறோர் வேடதாரி! ஈட்டியைக் காட்டி மிரட்டினான், இன்னொருவன்! பூஜை மணிகள் ஒலிக்கவேண்டியபுண்யபவனத்தில், இந்தக் காலிக் கூச்சல்! போலீசைத்தடுத்து நிறுத்தினர், பண்டாரக் கூட்டத்தினர்.

குற்றவாளிகள் சிலர் இங்கு பதுங்கிக்கொண்டுள்ளனர். அவர்களைக் கைதுசெய்ய வந்திருக்கிறோம். எம்மைத் தடுப்பதும், தாக்குவதும், சட்டப்படி பெருங் குற்றம். சாது சன்யாசிகள் கோலத்தில் இருந்துகொண்டு இந்தச் சட்டவிரோதமான செயல் புரிகிறீர், தகாது, சட்டம் சும்மாவிடாது, எச்சரிக்கிறோம், என்று போலீஸ் அதிகாரிகள் அறிவுரை புகன்றனர். ஆண்டிகள் ஆர்ப்பரித்தனர், போலீசைத் தாக்கினர், சிலர் ஓடி ஒளிந்தனர், ஒருவரும், சாந்தி, சன்மார்க்கம் ஆகியவைகளை மதிப்பவர்களாகத் தெரியக்காணோம்.

பெரியதோர் கொள்ளைக் கூட்டத்தைப் பிடித்திடச் சென்றால் ஏற்படும் ஆபத்தைவிட அதிகமாக இங்கு ஏற்பட்டது. பெயரோ, மடாலயம்! செயலோ ! இவ்விதம்! இத்தனைக்கும், சாது சன்யாசிகள் வசிக்கும் இடம், இங்கு போலீசார் நுழைந்து தகாத முறையிலே ஏதும் செய்துவிடக்கூடாது என்பதற்காகவோ என்னவோ, மடாலயச் சோதனையை இன்ஸ்பெக்டர் ஜெனரல்ரே என்பவரும், ஜில்லாமாஜிஸ்ட்ரேட் அனந்தகிருஷ்ணன் என்பாரும், நடத்தினர். வழிமறித்து அடித்தனர், மடத்தார்கள். போலீஸ் தடியடி நடைபெற்றது, கொழுத்துக் கிடந்த மாமிசப்பிண்டங்களல்லவா, தடியடிகண்டு அஞ்சவில்லை, திருப்பித்தாக்கினர், போலீசில் பலருக்குக்காயம், கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டன, பலன் இல்லை, கடைசியில் ராணுவப் போலீஸ்வரவழைக்கப்பட்டு மூன்று மணிநேர, 'கைகலப்பு'க்குப்பிறகு, போலீஸ், சட்டத்தை நிலை நிறுத்த முடிந்தது, சன்யாசிக் கூட்டத்தை அடக்கமுடிந்தது.

ஜூலை 18-ல் இந்தப் போர்! இரண்டுசாதுக்கள்மாண்டனர், ஒரு போலீஸ்காரர் கொல்லப்பட்டார், ஆறு போலீசாருக்குக்காயம்! அருளகத்தின் அறுவடை!

மடாலயத்தைப் போலீஸ் சோதனையிடுகிறார்கள், குவியல் குவியலாக ஆயுதங்கள். மடாலயத்திலே ஆயுதக்கிடங்கே அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றனர்!

ஆயுதக்குவியல் மட்டுமா! ஆரணங்குகள்—இருந்தனர்!!

யாரம்மா நீ? இங்கு ஏன்வந்தாய்?

நான் வந்தேனா! என்னைத்தூக்கிக் கொண்டு வந்துவிட்டார்களய்யா! நான்மணமானவள். என்னை, இந்தப் பாவிகள்........

எப்படி நடந்ததைச் சொல்வாள், அந்தப் பெண்; வயது பதினெட்டாம். ஐந்து பெண்கள் இது போலப் போலீசில் அடைக்கலம் புகுந்தனர்.

பகலபாபாவும், அவருடைய வலக்கரம் இடக்கரம் போன்றார்களும்: இப்போது சிறையில்!

பகலபாபாவின் வாரிசு என்று பட்டமாம், பைராகிபாபா என்பவனுக்கு, வயது நாற்பதாம், இவன்தான் ஆயுதம் சேகரிக்கும் அரும்பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தவனாம். இவன் போலீசாரிடம்

சர்வம் 'கமிட்டி' மயம்!

டில்லி, விரைவில் இன்னொரு ஆராய்ச்சிக் கமிட்டியை அமைக்கப்போகிறதாம்—மிஷினில் அரைக்கும் அரிசியில் சத்து அதிகமா, கைக்குத்தல் அரிசியில் அதிகமா என்பதை ஆராய. சிறுவகுப்புமுதல், இதுவரை எல்லோரும் படித்து அறிந்த விஷயம்! இதற்குஓர்கமிட்டியாம், இப்போது!! வேண்டியவர்களுக்கு ஏதாவது ஒரு வேலை கொடுக்கவேண்டுமென்றால், நேருவின் ஆட்சியில், இப்படிக் கமிட்டிகளை உற்பத்தி செய்வதென்பது, வழக்கமாகிவிட்டது!

சிக்கினால், எப்படியும் உண்மையைக் கக்கவேண்டி நேரிடும் என்ற பீதியால், தற்கொலை செய்துகொள்ள முயற்சித்திருக்கிறான், போலீஸ் விடவில்லை. இவனும் சிறைப்பட்டான். இந்த பைராகி பாபா, போலீஸ் வேலையிலிருந்து விலக்கப்பட்டவனாம், ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு மடத்தில் சேர்ந்து, அடுத்த 'பகவான்' ஆவதற்குத் தயாராகிக்கொண்டிருந்தானாம்.

உயர்தர சர்க்கார் அதிகாரிகள் எவ்வளவு இளித்தவாய்த்தனமாக இந்த எத்தர்களிடம் சிக்கிக் கிடந்தனர் என்பதற்கோர் எடுத்துக்காட்டு—அன்று பிடிபட்டவர்களில் ஒருவர், சர்க்கார் அலுவலகத்தில் வேலை பார்க்கும் சதானனஜீனா என்பவராம்! ஒரு இலாகாவில் துணைப் பெரும் அதிகாரி!

பகலபாபாவைத் தெய்வம், என்று கூறினர், மக்கள் நம்பினர்.

மடாலயத்தில் சேர்ந்தால் மகேசன் அருள் சுரக்கும் என்றனர், மக்கள் 'ஆம்' என்றனர்.

இதுமட்டுமா! கட்டாக் நகரில் ஒரு மாதாம்—அவள் காளி அவதாரம் என்று ஒரு கதை கட்டிவிட்டனராம், மக்கள் இதனையும் நம்பினர்.

அறிவுத்துறையில் அமோகமான வளர்ச்சி ஏற்பட்டுள்ள இந்த நாட்களில், காளிபோதா மடாலயம் காணமுடிகிறது! காட்டரசன் கோட்டைகள், நாட்டை ஆளும் அரசுகளைச் சவாலுக்கு இழுக்குமளவுக்கு, ஆணவம் பெறுகின்றன! காளி கட்டுகிறார்கள், கற்பழிக்கிறார்கள்!! கமண்டலம் இருக்கிறது, அதிலே கற்பழிக்கப்பட்ட கன்னியரின் கண்ணீர்!! மக்களின் மதியை மாய்த்து, மாபாதகம் புரியும் இத்தகு மதோன்மத்தர்களின் 'யோகாப்யாசம்' தங்கு தடையின்றி இன்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

பாடும் பதிகத்தைக் கேளுங்கள், பக்தி சொட்டும்!

பூசிடும் திருநீறு காணுங்கள், சிவப்பழமாகத் தெரியும்!

அருளிடும் உபதேசத்தைக் கேளுங்கள், ஊன் உருகும், உள்ளம் உருகும்!

உள்ளே புகுந்து பாருங்கள், பைராகி பாபாவும், அவன் போன்றோரிடம் சிக்கிச் சீரழிந்த சிங்காரிகளும் தெரிவர்.

இத்தகைய அக்ரமத்தைக் களைந்தெறியும் ஆற்றலைக் காணோம், அடக்கிடும் வல்லமை இல்லை, கண்டிக்க வாய் இல்லை, நம்மை நிந்திக்கிறார்கள், நாத்திகர் என்று, பண்டாரக் கோலத்தில் பாதுஷா வாழ்க்கை நடத்தும் பரப்பிரம்மங்கள்!

பேசிப் பாருங்கள் அவர்களிடம், தேன் ஒழுகும்!

தத்துவ விசாரணை நடாத்தச் சொல்லுங்கள் நாமே, செச்சே! மானிட ஜென்மம் என்றால் இவ்வளவு கேவலமானதுதானா, இதையா சுமந்து திரிகிறோம் என்று கூறி, வெறுத்து, காடு ஏகிக் கடுந்தவம் புரியலாமா என்று எண்ணத்தோன்றும். அப்பப்பா! கொஞ்சமாகவா பாடிவிட்டுச் சென்றுள்ளனர், இந்தப் பாழும் மனித ஜென்மத்தின் கேவலம்பற்றி!

கள்வர் ஐவர் கலகமிட்டலைக்கும் கானகம்!

சலமலப்பேழை!

இருவினைப்பெட்டகம்!

வாதபித்தங்கோழை குடிபுகுஞ் சிறார்!

ஊத்தைப்புன்தோல் உதிரக் கட்டளை! பீற்றற்றுண்டம்!

பேய்ச்சுரைத்தோட்டம்!

ஆசைக் கயிற்றில் ஆடும்பம்பரம்!
ஓயா நோய்க்கிடமோடு மரக்கலம்!
மாயாவிகார மரணப்பஞ்சரம்!
சோற்றுத்துருத்தி!
விதிவழித்தேமன் வெட்டும் கட்டை!

சதுர் முகன் தைக்கும் சட்டை!

பாமரருக்கு இது! இப்பதிகம் பாடிடும் பண்டாரங்கட்குத் தேவைப்படும் சரக்கோ பதினெட்டாண்டுப்பாவை!

“ஸ்வாமிகாள்! யோகாப்யாசத்துக்கு எழுந்தருளலாமா!” என்று 'சந்திரகாந்தா' என்ற சினிமாப் படத்தில், காலஞ்சென்ற காளிரத்தினம் கூறியபோது, மதவாதிகளும், மட அதிபர்களும், மார்க்க பந்துக்களும் காகூவெனக் கூவினர், கலாம் விளைத்தனர்! படம், உதிர்ந்து போகுமளவுக்கு ஆண்டு பலவாகிவிட்டன, ஆனால், இதோ யோகாப்யாசம் நடைபெறுகிறது! யார் இருக்கிறார்கள் தடுக்க! பகுத்தறிவு பரவா முன்பு, யாருக்குப் பிறக்கும் அந்தத் துணிவு! பரவும் பகுத்தறிவு கண்டு பதைபதைத்து, ஒழுக்கம் கெடும், பண்பு பட்டுப்போகும் என்று புலம்பும் புண்யவான்கள், இதோ டில்லியிலும், கட்டாக்கிலும் நடைபெற்ற யோகாப்யாசம் குறித்து, என்ன சொல்கிறார்கள்.

பிடிபட்டவர்கள் இருவர்!

ஆனால்: பிடிபடாமல் யோகாப்யாசம் செய்துகொண்டிருப்பவர்கள், ஏராளம்.

எங்கே என்று தெரியவேண்டுமா? அறிவுக்கண் கொண்டு, தேடுங்கள், நம்மைச் சுற்றிலும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பாமரர் அவர்களிடம் சொக்கிக் கிடக்கின்றனர்.

செல்வர்கள் காணிக்கை கொட்டுகின்றனர்.

சர்க்கார் உத்யோகஸ்தர்களும் அங்கு சரண் புகுகின்றனர்!

கட்டழகு இருக்கும் ஒரே குற்றத்துக்காகக் கன்னியர் கற்பழிக்கப்படுகின்றனர்!

யோகாப்யாசம், நடந்த வண்ணம் இருக்கிறது, நண்பர்களே! நடந்த வண்ணம் இருக்கிறது.

★

எமது புதிய வெளியீடு

அரசியல்	இலக்கியம்
கடவுள்கள்	கலைகள்
மத கோள்கை	தொழில்கள்
விழாக்கள்	பண்புகள்

இவைகள் அனைத்தும் இடம்பெறும்
சரித்திர வரலாறு
நாவலர்
இரா. நெடுஞ்செழியன் M. A.
எழுதிய
பண்டைக் கிரேக்கம்
விலை ரூ. 1—0—0

திராவிடப் பண்ணை
தெப்பக்குளம், திருச்சி.

13. போலீசில் நல்லமுத்து

"அப்படிச் சொல்லாதீங்க, அம்மா. அதுமாதிரி ஒண்ணும் நடந்திருக்காது!"

"என்ன நடந்திருக்காது. இந்தச் சமதர்மவாதிகளெல்லாம் கொலை செய்றதுக்கு பயப்படமாட்டானுவ. மகாநெஞ்சழுத்தக்காரனுவளாச்சே. எனக்குத் தெரிஞ்சே எத்தனையோ கொலை செய்திருக்கானுவ. இவ்வளவும் தெரிந்திருந்தும், அவனுகிட்டே சிநேகிதம் வைத்துக்கொண்டதற்கு என் புத்தியைச் செருப்பால் அடிக்கணும்!"

"ஆனால், ரொம்பப் பரபரப்போடுதான் அவர் நேற்றிரவு வந்தாரம்மா!"

"இருக்கும். அவனை மதிச்சு நடத்தினதற்கு, இந்த வெகுமதி எனக்கு வேண்டியதுதான். சரி, போ, இந்தச் சம்பவமெல்லாம் எதிலே போய்முடியப் போகுதோ!" என்று கூறி மறுபடியும் நாற்காலியில் சாய்ந்து கொண்டாள், புஷ்பா.

ஆறுமுகத்திற்கு இந்தக் கட்டம் பரம திருப்தியை அளித்தது. அவன் எதிர்பார்த்ததைவிட அதிகமான அளவுக்குப் புஷ்பா அவன் பக்கம்சேர்ந்துவிட்டாள்! இனிமேல் நல்லமுத்துவுக்குப் பரிந்து நல்ல வார்த்தை பேச யாரிருக்கிறார்கள்? தான் அபரிமிதமான வெற்றியை அடைந்துவிட்டதாக எண்ணிக் கொண்டு அறையைவிட்டு வெளியே வந்தான், ஆறுமுகம்.

ஆறுமுகம் மாடிப் படியைவிட்டு இறங்கி முன் வராந்தாவிற்கு வருவதற்கும் அங்கே இரண்டு போலீஸ் காரர்கள் வந்து நிற்பதற்கும்சரியாக இருந்தது. உடனே பின்தங்கி மாடிமேல் இரண்டு படிகள் ஏறி மறைவில் போய் நின்றுகொண்டான்.

முன்னாலிருந்த காரிலிருந்து இன்ஸ்பெக்டர் ஆதிமூலம் இறங்கினார். பின்னாலிருந்த காரிலிருந்து இரண்டு போலீஸ்காரர்கள் இறங்கினர். அவர்கள் பின்னால் நல்லமுத்துவும் இறங்கினான்!

நல்லமுத்துவைப் பார்த்தவுடன் அப்படியே நடுங்கிவிட்டான், ஆறுமுகம். இந்தமாதிரி, இவ்வளவு சீக்கிரம், நல்லமுத்துவையே அவன் முன்னிலையில் கொண்டுவந்து நிற்க வைப்பார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. இந்தப் புதிய சூழ்நிலையில் என்னசெய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. மற்ற எல்லோரையும் விடவெகு சுலபமாக அவன்மனதைக் கவர்ந்தவனல்லவா, நல்லமுத்து! அவனையே குற்றம் சாட்டி, அவன் முன்னிலையில், ஆறுமுகத்தால் எப்படிப் பேசமுடியும்?

ஒரே வினாடியில் அவன் முகமெல்லாம், உடலெல்லாம் வியர்த்து புஷ்கோட் கூட நனைந்து கொண்டிருந்தது.

ஆதிமூலம், நல்லமுத்துவை மாத்திரம் அழைத்துக்கொண்டு முன் ஹாலுக்குள் நுழைந்தார். போலீஸ் காரர்கள் இருவரும் வாயிற்படியில் வந்து நின்றுகொண்டனர்.

ஆறுமுகமும் அப்படியே நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்த வண்ணம் மாடிப்படிகளில் உட்கார்ந்துவிட்டான்.

சில நிமிடங்களில் ஹாலிலிருந்து சாமிநாதன் வெளியே வந்தான்.

ஆறுமுகம் தைரியத்தையெல்லாம் வரவழைத்துக்கொண்டு மெதுவாக இறங்கினான், சாமிநாதன், ஆறுமுகத்தைப் பார்த்ததும், "ஆறுமுகம்...! நீ இங்கே, இருக்கியா? சின்ன ஐயா, உன்னைக் கூப்பிடுறாங்க!" என்றான்.

ஆறுமுகத்திற்குப் பயம் தொண்டையை அடைத்துக்கொண்டது. உள்ளேபோய் வம்பில் மாட்டிக் கொள்வதை இப்படியே ஓடினால் தான், என்ன? அப்படியே குழப்பத்துடன் நின்றான் ஆறுமுகம். மறுநிமிடமே "பிள்ளையின் பிணத்தைக் கண்டுபிடிக்காதவரை, யார் தான் அவன் செய்த குற்றத்தைக் கண்டுபிடிக்க முடியும்?" என்று தோன்றியது.

இந்த எண்ணம் தோன்றிய மறுநிமிடமே ஆறுமுகத்திற்குப்பழைய தைரியமெல்லாம் திரும்பிவந்துவிட்டது. காலையிலிருந்து நடந்தவைகளையெல்லாம், ஒருதடவை திரும்பி எண்ணிப்பார்த்தான். மறுவினாடியே ஹாலுக்குள் நுழைந்து அறைக்குச் சென்றான்!

அறைக்குள்ளே பாஸ்கரும், இன்ஸ்பெக்டர் ஆதிமூலமும் ஒரு சோபாவில் உட்கார்ந்திருந்தனர். எதிரில் இருந்த நாற்காலியில் நல்லமுத்து உட்கார்ந்திருந்தான். ஆறுமுகம் வாயிற்படி அருகிலேயே தலையைக் குனிந்துகொண்டு நின்றான்.

ஆறுமுகத்தைப் பார்த்ததும், ஆவலோடு எட்டிப் பார்த்தான், நல்லமுத்து. ஓரக்கண்ணால் அதையும் கவனித்துவிட்டுத் திரும்பி நின்றான் ஆறுமுகம். தைரியமாக நல்லமுத்துவை நிமிர்ந்து பார்ப்ப

தற்கே, அவனுக்குப் பயமாக இருந்தது.

"டேய், இங்கிட்டு, வந்து நில்லுடா!" என்றார் ஆதிமூலம்.

ஆறுமுகம் மெதுவாக நகர்ந்து இன்ஸ்பெக்டருக்கும் நல்லமுத்துவுக்கும் இடையில்போய் நின்றான்.

அப்பொழுதுதான் பாஸ்கர் எவ்வளவு கடுகடுத்த முகத்துடன் நல்லமுத்துவைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை அவன் கண்டான்.

நல்லமுத்துவோ சாதாரணமாக உட்கார்ந்திருந்தான்.

"டேய், இவரை உனக்குத் தெரியுமா?" என்று ஆரம்பித்தார், ஆதிமூலம்.

ஆறுமுகம் தலையைக் குனிந்த வண்ணமே "நேற்றுத்தான், பார்த்தேனுங்க......"

"அதற்கு முன் தெரியாதா?"

"நேற்றுவரை அவர் முகச்சாயலைக் கூட நான் கண்டதில்லிங்க!"

"சரி. அவரை நேற்றிரவு சுமார், பத்தரை மணிக்கு எங்கே பார்த்தே?"

"வந்துங்க......"

"டேய், நிஜமா, நீ கண்டதைத் தான்கூறணும்! ஆமா, பொய்சொன்னால் என்ன கிடைக்கும் தெரியுமில்லே......!" என்று இழுத்தார்.

ஆறுமுகம் இன்னும் தலையைக் கீழே போட்டுக் கொண்டான்.

"என்னடா, இவரை, எப்போ பார்த்தே"

"நேற்றிரவு பார்த்தேனுங்க..."

"எங்கே?"

"இங்கேதானுங்க. இந்த பங்களா வெளி கேட்டருகில்......!"

"ஆறுமுகம்......" என்று துள்ளி எழுந்தான் நல்லமுத்து. உடனே இன்ஸ்பெக்டர் ஆதிமூலம் எழுந்தார்.

"என்ன, சார். முதலிலேயே சொன்னேன். இந்தமாதிரிகுறுக்கே எல்லாம் சத்தம் போடக்கூடாதென்று. அப்புறம், வழக்கப்படி விசாரணை நடத்த வேண்டித்தான் வரும். தயவு செய்து அமைதியாக விசாரணை நடக்க விடுங்கள்!" என்றார் ஆதிமூலம் நல்லமுத்துவைப் பார்த்து.

ஆறுமுகத்தையும் ஆதிமூலத்தையும் மாறி மாறிப்பார்த்து விட்டுப் பேசாமல் உட்கார்ந்து விட்டான், நல்லமுத்து.

ஆதிமூலம் மறுபடியும் ஆரம்பித்தார்.

"எத்தனை மணிக்குடா, இங்கே பார்த்தே?"

"சுமார் பத்து, பத்தரை இருக்குங்க......

உன்னிடம் என்னடா சொன்னார்?"

"கார் ஷெட் திறந்திருக்கான்னு, கேட்டாருங்க!"

இதைக் கேட்டதும் நல்லமுத்து மறுபடியும் திடுக்கிட்டு எழுந்தான். ஆனால் ஆதிமூலத்தைப் பார்த்ததும் பேசாமல் உட்கார்ந்து விட்டான்.

ஆதிமூலம், 'வேறு என்னடா சொன்னார்?" என்றார் ஆறுமுகத்தைப் பார்த்து.

"வேறே ஒன்றும் பேசலேங்க..." என்று கூறிவிட்டு இன்னும் தலையைக் கீழே போட்டுக்கொண்டான்.

ஆதிமூலம் வெற்றிப்பார்வையோடு நல்லமுத்துவைப் பார்த்தார். நல்லமுத்து ஆறுமுகத்தை உற்று நோக்கிய வண்ணம் எழுந்தான்.

இதற்குள் "ஐயோ, அடபாவி! பழிகாரா!!" என்று சத்தம்போட்ட வண்ணம் உள்ளே நுழைந்தாள் புஷ்பா.

புஷ்பாவின் அலங்கோல நிலையைக் கண்ட நல்லமுத்து திடுக்கிட்டு, "புஷ்பா!" என்று கத்தினான். "சீ, பாவி! இனி அந்தக் கொலைகார வாயால் என்னைக் கூப்பிடாதே!" என்று ஆத்திரத்தோடு கூறிக்கொண்டு நல்லமுத்துவினருகில் சென்றாள். அதற்குள் பாஸ்கரும், ஆதிமூலமும் எழுந்து அவளருகில் ஓடினர். "சுத்த முட்டாளாயிருக்கியே, உன்னை யார் இங்கு வரச் சொன்னது?" என்று கோபமாகக் கூறி அவள் கையைப் பிடித்து வெளியே இழுத்துக்கொண்டு போனார் பாஸ்கர்.

"சேச்சே! அப்படியெல்லாம் அதட்டாதிங்கோ, சார்! இப்போ, நீங்கதான் அவர்களைச் சமாதானப்படுத்தணும்!" என்று கூறிக்கொண்டே ஆதிமூலம் அவள்பின்னே சென்றார்.

அவர்கள் போன திக்கையே பார்த்துக்கொண்டிருந்துவிட்டு ஆறுமுகத்தின் பக்கம் திரும்பினான், நல்லமுத்து. அங்கு நடந்தவைகளையும், கேட்டவைகளையும் அவனால் நம்ப முடியவில்லை. எல்லோரும், ஏன் இப்படி அவன்மீது குற்றம் சாட்டுகின்றனர் என்றே புரிந்துகொள்ள முடியவில்லை.

ஆறுமுகத்தினருகில் சென்றான். பழையபடி குனிந்த தலையோடு பல்லைக் கடித்துக்கொண்டிருந்தான் அவன்.

"ஆறுமுகம்! ஆறுமுகம்!!"

"..........."

"இதோ, என்னைப்பார்? இப்படியெல்லாம் உன்னைச் சொல்லச் சொன்னது யார்? ஆறுமுகம்! இதோபார்! உன்னையே கருவியாக வைத்துக்கொண்டு, உன்னினத்திற்கு உதவி செய்யும் என்னை அழிக்க முயற்சிக்கிறார்கள். இது உனக்குத் தெரியவில்லையா, ஆறுமுகம்!"

ஆறுமுகமும் பழையபடியே மௌனமாக இருந்தான்.

நல்லமுத்து மறுபடியும் பேச ஆரம்பிப்பதற்குள், ஆதிமூலமும், பாஸ்கரும் வந்துவிட்டனர். நல்லமுத்து ஒதுங்கிப் பழையபடி உட்கார்ந்து கொண்டான்.

"இப்போ, என்னசார், சொல்றிங்க. நேற்றுப் பங்களாவுக்கு நீங்க வந்ததைப்பார்த்தவன் இதோ இருக்கிறான். பிள்ளையைக் காலையிலே இருந்து காணோம். நாங்க என்ன முடிவுக்கு வருகிறது?" என்று கூறிக்கொண்டே உட்கார்ந்தார் இன்ஸ்பெக்டர் ஆதிமூலம்.

நல்லமுத்து இன்ஸ்பெக்டரைப் பார்த்தபடியே "என்ன பண்ணுவதென்று...? வேடிக்கையாயிருக்கிறதே உங்கள் நியாயம். நேற்றிரவு நான் இங்கேயே வரவில்லை, சார். இதோ, இந்த ஆறுமுகத்தை நேற்றுப் பகல்தான் பார்த்தேன். நீங்கள் அதுக்குள்ளே அவனை, மிரட்டின மிரட்டிலே உளறுகிறான்!" என்றான்.

ஆதிமூலத்திற்கு கோபம் வந்தது. ஆறுமுகம்பக்கம் திரும்பி, "என்னடா, இவரை மந்திரியானம், பார்த்தியா, ராத்திரி பார்த்தியாடா?" என்று கத்தினர்.

ஆறுமுகம் மெதுவான குரலில், "இரண்டு வேளையுந்தாங்க. மந்திரியானம் புஷ்பா அம்மாகூட வந்தாருங்க. இராத்திரி வருவதாக அவங்களிடம் சொல்லிவிட்டுப் போனாருங்க. பிறகு இராத்திரி வந்தாங்க...!"

நல்லமுத்துவுக்கு அப்படியே மூச்சடைத்துக் கொண்டது.

"சேச்சே! பணத்திமிர், இந்தளவுக்கு வளரக்கூடாது. காதலிபோல நடித்து, தொழிலாளர் உலகத்தையே நசுக்கச்சதித்திட்டமா...?" என்றான்.

ஆதிமூலம் மறுபடியும் நல்லமுத்துவை எச்சரித்தார்.

"என்னசார், முன்பே கூறினேனே. இந்தமாதிரி அரசியலையும் சொந்த விஷயங்களையும் இதில் புகுத்தக்கூடாதென்று. பிரத்யட்சமாகத் தெரியுது, பிள்ளையையாரோ அப்புறப்படுத்தியிருக்கிறார்கள் என்று. இதில், சொந்த விஷயங்களைப் போட்டுக் குழப்பவேண்டாம் இப்பொழுது எனக்கு வேண்டியதெல்லாம் நேற்றிரவு நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள் என்பது தான். மீதியைக் கோர்ட்டிலே கூறிக்கொள்ளுங்கள்!" என்று தன் கடமையைக் கழித்தார், ஆதிமூலம்.

நல்லமுத்து பேசாமல் அவர்களைப் பார்த்தான், பிறகு, "சரி, சார்! நேற்றிரவு நான் இங்குவந்ததைப் பற்றித் தானே உங்கள் ஆராய்ச்சியெல்லாம். வாருங்கள், ஸ்டேஷனுக்கு. அங்கு பேசிக்கொள்ளலாம்" என்று எழுந்தான்.

ஆதிமூலமும் திகைத்தவண்ணம் எழுந்தார். பாஸ்கரும் அவர்கள் கூடவே எழுந்தார்.

"என்ன சார்! ஏதாவது ஆகவேண்டியதைச் செய்திடலாம். அப்பாவை திரும்ப அனுப்பிவிட்டால் நல்லது!" என்று இழுத்தார், பாஸ்கர்.

ஆதிமூலம் "உஸ்!" என்று கையை ஆட்டினர். அதையும் மீறிக்கொண்டு "என்ன, உங்கப்பாவைத் தூக்கி, வைத்துக்கொண்டு போராட்டம் நடத்துகிற அளவுக்கு கோழைகளா நாங்கள். எவரோ எதையோ செய்துவிட்டால், எங்களை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள். இந்தப் பணக்கார எண்ணம் போக மாட்டேங்குதே!" என்று கூறிக்கொண்டே முன்னால் சென்று காரில் ஏறினன் நல்லமுத்து.

ஆதிமூலம் "உஸ் உஸ்" என்று அவன் வாயை அடக்கிக்கொண்டு போய் காரில் ஏறினர். சில விநாடிகளில் கார்கள் புறப்பட்டன. அவைகள் கேட்டைத் தாண்டும் வரை பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, மறுபடியும் உள்ளே வந்தார் பாஸ்கர். அதே நேரத்திலே மாடியிலிருந்து இறங்கிவந்தாள் புஷ்பாவும்.

"என்ன அண்ணா? என்ன சொன்னான்?" என்று கேட்டுக்கொண்டே அருகிலிருந்த சோபாவில் உட்கார்ந்தாள்.

'என்னத்தைச் சொல்றது. நேற்று இங்கு வரவேயில்லை என்கிறான். இழவு! எல்லாம் உன்னுடைய பைத்யக்காரத்தனத்தாலே வந்தது! இந்தமாதிரி புத்திகெட்ட பசங்களோடு சிநேகிதம் வைத்திருக்கலாமா?"

'அது சரி, அண்ணா! என்னமோ அப்போ அது தெரியலே. இப்போ அதுக்கு என்ன செய்வது பெரிய குடும்பம், சின்னக்குடும்பம், எது எப்படியெப்படி இருக்குமென்று இப்போதானே தெரியுது. ஹூம்........வரவேயில்லையென்கிறானா! சுத்தப் பொய்! எந்தக் காலத்திலேயும் அவன் குறித்த நேரம் தவறியதில்லை. நேற்று இங்கு வந்திருப்பான்!"

"கட்டாயமா வந்திருப்பான்—இல்லை வந்திருக்கமாட்டான். எது நிஜமோ நமக்குத் தெரியாது! ஆனல், ஆறுமுகத்திற்கு என்ன அக்கரை, பொய் சொல்லனுமென்று? அவன் கூறுவதே பொய், நாம் சொல்லிக்கொடுத்துச் சொல்லச் சொல்வது என்றெல்லாம் கூறிவிட்டுப் போய்விட்டான்!"

"அப்படியா...! ஐயோ, அந்த ஆட்களைக் கொஞ்சம் பேசவிட்டால் போதுமே! ஆளையே மயக்கி, மூச்சுவிடுவதற்குக்கூட அர்த்தம், வர்க்கம் எல்லாம் பேச ஆரம்பித்துவிடுவானுவ. "ஆறுமுகம்! எது நடந்தாலும் பயப்படாமல் உண்மையைக் கூறு. உன்னைக் கவனித்துக்கொள்ள நாங்களிருக்கிறோம்! ஆமாம்! அவன் ஏதாவது ஆசையாய் கூறுகிறானென்று ஏமாந்துவிடாதே!" என்றாள், ஆறுமுகத்தைப் பார்த்து.

ஆறுமுகம் தலையை நிமிர்த்தினான், கடைசியாகப் புஷ்பாவே அவனுக்குப் பக்கபலமாகக் கிடைத்துவிட்டாள். இனித் தனக்குப் பயமில்லை என்ற எண்ணம் லேசாகத் தோன்றியது, ஆறுமுகத்திற்கு. "சரிங்க" என்று தலையை ஆட்டிவிட்டு மெதுவாக வெளியே வந்தான்.

வெளியே எங்கும் ஓரே இருள் மயமாக இருந்தது. நிலா இன்னும் தோன்றவில்லை. குளிர் காற்று மாத்திரம் வீசியது. உள்ளே இதுவரை அனுபவித்த தண்டனையில் உடல் பூராவும் வியர்த்துவிட்டிருந்தது ஆறுமுகத்திற்கு. கார் ஷெட்டிற்குப்போய் கார் துடைக்கும் துணியாலேயே தன் முகத்தையும் துடைத்துக்கொண்டு ஷெட்டைப் பூட்டினான். திரும்ப வீட்டிற்குள் வந்து தன் அறையிலே சாவிகளை வைத்துவிட்டு வெளியே வந்தான். அந்த நேரத்திலே மானேஜர் சாம்பசிவமும் வந்தார்.

அவரைக் கண்டதும் ஆவலோடு பாஸ்கரும் புஷ்பாவும் எழுந்து ஓடி வந்தனர்.

"என்ன, ஏதாவது செய்தி கிடைத்ததா?" என்று கத்தினள் புஷ்பா.

"இல்லிங்களே......! பகல் பூராவும் அலைந்ததுதான் மிச்சம். அநேகமாக நகரத்திலே நமக்குத்தெரிந்த அத்தனை வீட்டையும் பார்த்துவிட்டேன். லேபர் கமிஷனர் ஆபிஸை விட்டு எட்டுமணிக்கே போயிட்டாராம். இது வேறே எல்லோரும் விபரம் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். எப்படியோ, விஷயத்தை மாத்திரம் கூறாமல் ஒவ்வொரு இடத்திலும், ஏதோ சாக்குச்சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எப்படியும் அவரைத் தேடனும்னு விஷயம் வெளியாயிடும் போலத்தானிருக்கு!" என்று தன் பகல் நடவடிக்கையை ஒப்புவித்தார் சாம்பசிவம். (தொடரும்)

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.